ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
Sri Lanka Broadcasting Corporation



# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT 2014

# இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்

## வருடாந்த அறிக்கை
## மற்றும் கணக்குக் கூற்று
## 2014

**2014 ஜனவரி 01 தொடக்கம் 2014 டிசெம்பர் வரை**

கௌரவ பாராளுமன்ற சீர்திருத்த மற்றும் ஊடக அமைச்சர்
பாராளுமன்ற சீர்திருத்த மற்றும் ஊடக அமைச்சு
கொழும்பு

கௌரவ அமைச்சர் அவர்களே

**வருடாந்த அறிக்கை - 2014**

1971 ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 14 (1) ன் பிரகாரம் 2014 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கு பின்வரும் ஆவணங்களுடன் கூட்டுத்தாபனத்தின் ஆண்டு அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

01. 2014 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான ஆண்டுக்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய பணிகள் பற்றிய நிர்வாக அறிக்கை.

02. 2014 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசெம்பர் 31ஆம் திகதி வரையான கணக்கு ஆண்டுக்கான கணக்கு சம்பந்தப்பட்ட அறிக்கை.

03. 2014 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்கு சம்பந்தப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

04. 2014ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு கூட்டுத்தாபனம் முன்வைத்த மறுமொழி.

தங்கள் - உண்மையுள்ள

சட்டத்தரணி நந்த முருத்தெட்டுவேகம
தலைவர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு - 07

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நிர்வாக அறிக்கை | 01 - 09 |
| 02. | கணக்குக் கூற்று | 11 - 40 |
| 03. | கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 41 - 71 |
| 04. | 2014 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைஷ தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள் | 73 - 87 |

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## நோக்கு

**இலங்கையின் முதன்மை தொடர்பாடலாளராதல்**

## பணி

கேட்போரின் வாழ்வில் பங்கேற்கும் பொருளாதார சமூக, கலாசார ஒழுக்க, கல்வி, பொழுதுபோக்கு போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை ஒரு நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் அவர்களது வாழ்வை ஒளிமயமாக்கும் முகமாக அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமை ஆகியவற்றை வளர்க்கும் விதத்தில் ஒலிபரப்பு ஊடகத்தை செயற்படுத்துதல்

## நோக்கம்

01. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆகக்கூடிய கேட்போரைக் கொண்ட ஒலிபரப்பு அலைவரிசைகளைப் பராமரிக்கின்ற நிறுவனமாக செயற்படல்

02. பொறுப்புடன் சமநிலையில் தகவல்களை துரிதமாக வழங்குகின்ற இலங்கையின் ஊடகத்துறையில் முதல்வராக செயலாற்றல்.

03. உள்நாட்டு கலாசார முன்னேற்றத்துக்காக உயர் மற்றும் ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குதல்.

04. அறிவு, மனப்பாங்கு திறமை ஆகியவை நிறைந்த சுய ஊக்கமுள்ள ஊழியர் குழாமை உருவாக்கத் தேவையான பயிற்சியளித்தல்.

05. தயாரிப்பு மற்றும் ஒலிபரப்பு தொழில்நுட்பத்தை தகுந்தவாறு நாளதுவரைப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு கேட்போருக்கு தெளிவான செவிமடுப்பு நிலைமையை பெற்றுக்கொடுத்தல்.

06. ஒழுக்க விழுமிய அமைப்பொன்றுக்கமைய அர்த்தமுள்ள ஒலிபரப்பு ஊடக வழமையை உருவாக்கும் முகமாக முன்னோடி நிறுவனமொன்றாக செயற்படுதல்.

07. தேசிய ஒலிபரப்பாக அரசாங்கக் கொள்கைகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துதல் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்வதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குதல்.

08. சிறந்த நிதி நிர்வாகத்தையும் மனிதவள முகாமைத்துவத்தையும் பராமரித்தல்.

09. போட்டிகரச் சந்தையை மூலோபாயரீதியில் வெற்றி கொள்ளல்.

# நிர்வாக அறிக்கை

# 2014

## நிர்வாக அறிக்கை - 2014

### அறிமுகம்

1966 ஆம் ஆண்டு 37ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 1967 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் திகதி தொடக்கம் செயற்படும் விதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

2014 ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான 12 மாத காலப்பகுதி இவ்வறிக்கையில் உள்ளடங்குகின்றது.

மீளாய்வுக்குள்ளாகின்ற காலப்பகுதியினுள் பின்வரும் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனச் சபையில் அடங்கினர்.

01. திரு.ஹட்ஸன் சமரசிங்ஹ - தலைவர்

02. திரு.குமாரதாஸ சபுதந்திரி - கூட்டுத்தாபனச்சபை உறுப்பினர்

03. கலாநிதி ஹரிஸ்சந்திர விஜேதுங்க - கூட்டுத்தாபனச்சபை உறுப்பினர்

04. திரு.மனோஜ் பீரிஸ் - கூட்டுத்தாபனச்சபை உறுப்பினர்

05. திரு.லயனல் பின்து - கூட்டுத்தாபனச்சபை உறுப்பினர்

06. திருமதி தர்'ன் சேனாநாயக்க - கூட்டுத்தாபனச்சபை உறுப்பினா

**நிர்வாக அறிக்கை - 2014**

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் 2014ஆம் ஆண்டின் போது கேட்போர் மின்ஊடகத் துறையில் முன்னோடி நிறுவனமாக விளங்கியது.. பொதுமக்களின் வானொலி என தனது நோக்கை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக பல முதன்மைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் செயற்பட்டுள்ளது. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் முதன்மை ஊடகவியலாளராகத் திகழ்வதும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஆகும். இலங்கையர்களின் அறிவு, புரிந்துணர்வு போன்றே இரசனையை விஸ்தரித்து தேசியரீதியில் முன்னோடிப் பணியொன்றில் ஈடுபட்டு 2014ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனத்தில் செயற்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் அவற்றின் விளம்பரத்துக்காக ஈடுபடுத்தியுள்ள நிகழ்ச்சிகள் ஆகியவற்றை பற்றி சுருக்கமான குறிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>சுயாதீன சேவை</u>**

தேசிய அலைவரிசையின் முதல்வராக சுயாதீன சேவையானது பொருளாதார, சமூக கலாசார ஒழுக்க விழுமியம், கல்வி மற்றும் இரசனை ஆகிய பல்வேறு துறைகள் மூலம் நிகழ்ச்சித் திட்டங்களை விளம்பரத்துக்கு ஈடுபடுத்தியுள்ளது. சமய நிகழ்ச்சிகளுக்கு முக்கிய பங்களிப்பைப் பெற்றுக்கொடுப்பதுடன் விளம்பரத்துக்கு ஈடுபடுத்திய சமய நிகழ்ச்சிகளுக்கிடையே மத போதனைகள், மத சிந்தனைகள், மதக் கலந்துரையாடல்கள்,

(கிறிஸ்துவ இரசனை) கிறிஸ்துவ அட பய (கிறிஸ்துவ அரைனணி, கித்து ரச விந்தன ஆகியவற்றுக்கு மேலதிகமாக போப் ஆண்டகையின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளும் சங்கீத சங்திவனி இறுவெட்டை வெளியிடல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

செய்தி மற்றும் அன்றாடத் தகவல்கள் தொடர்பாக ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகளுக்கிடையே சுபாரதீ, புவத் அட்டுவாவ, செய்திப்பின்னணி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதற்கு மேலதிகமாக தேசிய டெங்கு வாரம், சர்வதேச சுற்றாடல் தினம், இசிவர அசபுவ, ஆரோக்கிய வாழ்வு மருத்துவர் கலந்துரையாடல், லிய சரணி, சிறிமெதுர, லலனா, லதா மடுல்ல ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

உயர் ரசனையை இலக்கியம் சம்பந்தமான அறிவை விருத்தி செய்யும் பொருட்டு மகாவம்சம், பஜித்த ஜீவித்த, ஒலிபரப்பு நடன அரங்கு, சரச ராவய நூர்தி மற்றும் நாடகம் கீ, ஊழியர் உபசரிப்பு, லலித்த கலாலே, மன்டெலா கீதய, வானொலி நடனக் காட்சி, தர்மபால மீள்வருகை ஆகிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

விவசாயம் சம்பந்தமான நிகழ்ச்சிகளாக கெவத்த, சாரபூமி, கொவிதெனட்ட பெயக், சந்தியா சேவய ஆகிய நிகழ்ச்சிகள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் உயிர்நாடிகளாகிய பிள்ளைகளுக்காக தினமும் பி.ப. 2.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை சிறுவர் நிகழ்ச்சிகள் விளம்பரப்படுத்தப்பட்டன. ரட்டக்க மஹிம குவனின் நுவனட்ட, கித்துனு லமா ஹமுவ, சமனல லந்த, மத்துதா பிரத்திபா பிரபா, தொஸ்தர ஹொந்த ஹித்த, குவன் தக்சலாவ, மே அபே பாசல, ரட்டட பிபென மல் ஆகிய நிகழ்ச்சிகளை விதுல சிறுவர் வானொலி மூலம் சுயாதீன சேவை ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

**<u>கல்விச் சேவை</u>**

வழமை போல் 2014ஆம் ஆண்டிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்திய தேசிய மட்டத்திலான போட்டிப்பரீட்சைகளுக்கு துணை நிகழ்ச்சிகளையும் விளம்பரப்படுத்தியுள்ளது. 2014ஆம் ஆண்டில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய கல்வி வலயங்களில் வசதி குறைந்த பாடசாலைகளின் பிள்ளைகள் கலந்துகொள்ளும் மாநாடுகள் பல நடாத்தப்பட்டன. பரீட்சைகளுக்காக விளம்பரப்படுத்திய நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக சில்ப மடுலு யட்ட, ஆயுள்வேத மருத்துவத்தின் வாய்ச்சுகாதாரம், தஹம் தக்சலாவ, இலக்கியத்தால் வாழ்வை வெற்றிகொள்வோம் போன்ற முறைசாரா கல்வி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டுள்ளன. தினமும் பி.ப. 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை கல்விச் சேவையின் நிகழ்ச்சிகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

**வர்த்தக சேவை**

வர்த்தக அலைவரிசையின் முக்கியமானதாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துக்கு சிறந்த சேவையை ஆற்றுகின்ற வர்த்தகச் சேவை 2014ஆம் ஆண்டிலும் தனது பொறுப்பை சிறந்த முறையில் நிறைவேற்றியுள்ளது.

ரண்தருபாயன ரிதீ ரயக், சொபாகெத, உருமரகிமு, தய சுரகிமு, பாலம ஆகிய நிகழ்ச்சிகள் மூலமும் பாலம, ஹந்தமாமா, அவிந்த பெய தஹஸ் வடீ, கொவி பிம்ய ஜய றபய், சந்தஹம் தஹர மத போதனை, பிரபல்யமான கீதங்கள், மதுரசாங்க, கீ மனரம், முலன்பெலஸ்ஸ, ரட்ட யன அத, தசதெஸின் போன்ற நிகழ்ச்சிகள் ஊடாகவும் கேட்போரினதும் அனுசரணையாளர்களினதும் பாராட்டுகளை பெற்றுக்கொண்டது.

பல்வேறு கோணங்களில் மேலும் விளம்பரப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கிடையே ஜனஜய மாவத்த, ஆயுர்வேத செத் அரண, சமுரதிபிளிசந்தர, ஆரோக்கியமான பிள்ளை தேசத்துக்கு ஒரு வளம், கீயக வியமன, வாரத்தின் மருத்துவ சிகிச்சை, வாழ்க்கைக்கு ஒரு நிமிடம், சம்மா ஆஜிவ, சீயக பண பத ஆகிய நிகழ்ச்சிகளை குறிப்பிடலாம்.

**சிட்டி எப் எம் சேவை**

இளம் சந்ததியினரை கவரும் முகமாக தேசிய வானொலி சிட்டி எப் எம் சேவையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. கேட்போரை நன்கு கவரும் முகமாக பல்வேறு கோணங்களில் நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமய நிகழ்ச்சிகளுக்கிடையே மத போதனைகள் தம்ம பதய, கிறிஸ்த்தவ நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு சமய வைபவங்களை விளம்பரப்படுத்துகின்றது. மத்திய கிழக்கில் வாழும் கேட்போரை தொடர்பு கொண்டு தச தெசின் மற்றும் ரட்ட யன அத, பனாபுத்ர சமக ஹோராவக், வயது வந்தோருக்கு மாத்திரம் ஆகிய நிகழ்ச்சிகள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. சிட்டி எப் எம் சேவையில் ஒலிபரப்பப்படுகின்ற இசை நிகழ்ச்சிகளுக்கிடையே ஹித மிதுரு சுலங்க, ஆராதனா, சுபாவித்த கீதய, மியுருசர, பிரபல்யமான ஹிந்தி கிதங்கள், மியசி கிருள, பெதுரு சாஜ்ஜய ஆகிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக தொழிலதிபரின் அனுசரணையுடைய நிகழ்ச்சிகளுடன் கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், மகளிர் நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பலவற்றை விளம்பரப்படுத்துவதற்கு சிட்டி எப் எம் சேவை நடவடிக்கை எடுத்துள்ளது.

**தமிழ் சேவை**

தமிழ்மொழி பேசும் மக்களின் முக்கிய அலைவரிசையாக பொருளாதார, சமூக கலாசார ஒழுக்க விழுமிய, கல்வி, இரசனை ஆகியவற்றை விஸ்தரிக்கும் பிரதான பங்களிப்பை வழங்கும் முகமாக தமிழ் சேவை சாமர்த்தியம் பெற்றுள்ளது. 2014ஆம் ஆண்டில் ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகளுக்கிடையே விடியும் வேளை, கவிதைக்கலசம், முத்துவிதானம், பெண் உலகம், சிறுவர் மலர், ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கொண்டாட வேண்டிய விடேட வாய்ப்புகளான தைப்பொங்கல் நிகழ்ச்சிகள், சுதந்திர தின நிகழ்ச்சிகள் மகளிர் தின நிகழ்ச்சிகள், சிங்கள, இந்து புத்தாண்டு நிகழ்ச்சிகள், சிறுவர் தின கொண்டாட்ட நிகழ்ச்சிகள் ஆகியவை போன்றே சர்வ மத நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

**தென்றல் சேவை**

தமிழ்மொழி பேசும் இளம் கேட்போரை இலக்காகக் கொண்டு 2014ஆம் ஆண்டு முழுவதும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு தென்றல் சேவைக்கு முடியுமாகியது. ஆண்டில் முக்கிய நிகழ்வுகள் மற்றும் தினங்கள் ஆகியவற்றை தொடர்புபடுத்தி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியிருந்ததுடன் பொன்மாலைப்பொழுது, பாட்டுக்கு பாட்டு, பாலம் அறிவொளி தொழிலதிபர் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒலிபரப்பியுள்ளது.

## முஸ்லிம் சேவை

முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்படுகின்ற பெரும்பாலான நிகழ்ச்சிகள் தொழிலதிபரின் அனுசரணையுடன் ஒலிபரப்பப்படுவதால் ஒலிபரப்பு நேரம் மு.ப. 8.00 மணி தொடக்கம் 10.30 மணி வரை ஒதுக்கப்பட்டுள்ளது. ஒலிபரப்பு நேரத்தை 12.30 மணி வரை பெரும்பாலும் ஒதுக்க வேண்டியுள்ளது. 2014ஆம் ஆண்டிலும் தொழிலதிபரின் அனுசரணையில் ஹஜ்ஜு மற்றும் ரமழான் வைபவங்களின் போது விே'ட நிகழ்ச்சிகளும் விே'ட வணக்க நிகழ்ச்சிகளும் பள்ளிவாசல்களிலிருந்து ஒலிபரப்பப்பட்டுள்ளன.

## ஆங்கிலச் சேவை

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப அலைவரிசையாகிய ஆங்கிலச் சேவை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பழைய மற்றும் நவீன இசை, நாடக நிகழ்ச்சிகள் பலவற்றுக்கு உரிமை கூறுகின்றது. கேட்போர் பெரும்பாலானோர் விரும்புவது இத்தகைய நிகழ்ச்சிகளை ஆதலால் ஆங்கிலம் கேட்போரில் உயர் ரசனையை வழங்கும் நோக்குடன் இவ் அலைவரிசை செயற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு துறையும் பிரதிநிதித்துவமளிக்கும் விதத்தில் அதாவது செய்தி மற்றும் அவ்வப்போதைய சிறுவர் மற்றும் மகளிர் ஆரோக்கிய மற்றும் போ'ாக்கு ஆகிய தலைப்புகளின் கீழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. வெளிநாட்டு உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கி பல விே'ட நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இசைப்பிரிவு

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை இசை அம்சங்களின் மூலம் அலங்கரிக்கச் செய்து இதன் நிமித்தம் புத்துயிரைப் பெற்றுக்கொடுப்பது இசைப்பிரிவு ஆகும். ஆண்டு பூராகவும் வாரத்தின் ஐந்து நாட்களிலும் தெரிவுசெய்த பாடகர்களின் திறனை மேம்படுத்தும் நோக்குடன் சுபாவித சங்கீதத்தை இரசிகர்களிடையே பிரசித்தப்படுத்தும் முகமாக “சுபாவத கீதய” என்னும் பெயரில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் வாத்திய இசை முன்வைத்த வாத்திய சங்கீத நிகழ்ச்சியாகிய “மியுரு சர” நிகழ்ச்சி கேட்போரின் உள்ளங்களை கவர்ந்த பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி ஆகும். வழமைபோல் முன்வைத்த லலித்த கலாலய, இரிதா சங்கிரஹய, ஜனகீ, பர்த கீ, நாடகம் கீ, விரிந்து, பைலா, தம்ம பத கீ, நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக சிறந்த இசை வல்லுநர்களின் மறைவுத் தினத்தை முன்னிட்டு “ஆவர்ஜனா” என்னும் பெயரில் விே'ட சங்கீத நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பி உள்ளது. சரச வஸ்ஸ எனும் புதிய ஆக்கங்கள் இசை நிகழ்ச்சிகளும் சிரத்தாஞ்சலி எனும் பெயரில் பௌத்த பாடல்கள் நேயர் விருப்பம் நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

## செய்தி மற்றும் அன்றாட நிகழ்ச்சிகள் பிரிவு

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் செய்தித் தொடர்புகள் செய்முறையின் முக்கியமான பணியை நிறைவேற்றுகின்ற செய்திகள் மற்றும் அன்றாட நிகழ்ச்சிகள் பிரிவு 2014ஆம் ஆண்டிலும் தனது வகிபங்கை தளராது நிறைவேற்றியுள்ளது. அரசாங்கக் கொள்கைகளைப் பற்றி மக்களை விழிபபூட்டும் நோக்கில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பன்னிரெண்டு பிரதான செய்தி வெளியீடுகளை ஒலிபரப்புகின்றது. ஒவ்வொரு மணித்தியாலயத்துக்கும் ஒரு முறை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் செய்திச்சுருக்கம் ஒலிபரப்பப்படுகின்றது

இலங்கை மக்களுக்கிடையே யதார்த்தமான நோக்கை அடையச் செய்யும் முகமாக தேசிய வானொலியில் செய்திகள் மற்றும் அன்றாட நிகழ்ச்சிகள் பிரிவு அரசாங்கக் கொள்கையையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளையும் பாராட்டத்தக்க சேவையை நிறைவேற்றியுள்ளது.

## கலையக இயக்கப் பரிரிவு

இலங்கை ஒவிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்தல், தொகுத்தளித்தல் ,மற்றும் சகல சேவைகளதும் தொடர்புகள் கலையக இயக்கப்பிரிவு ஊடாக நேரடி ஒலிபரப்புச் செய்தல் உட்பட விளம்பரப்பணிகள் எல்லாவற்றுக்கும் மகத்தான பங்களிப்பை 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுத்தொடர்புகள் பிரிவு**

2014 ஆம் ஆண்டில் பயிற்சிப்பட்டறைகளை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வெளி நிறுவன தொடர்பாடல் தொழில்நுட்பச் சான்றிதழ் பாடநெறி ஆகிய நிதி உழைக்கும் பட்டறைகள், அமர்வுகள், பயிற்சிப் பாடநெறிகள், செயற்படுத்தப்பட்டன. 2014ஆம் ஆண்டின் இறுதியளவில் பயிற்சி நிறுவனத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிர்மாண வேலைகளுக்காக பொறுப்பேற்றதனால் பலநோக்குப் பணி கலைக்கூடத்தின் மேல்மாடியில் வரையறுக்கப்பட்ட இடவசதியில் ஸ்தாபிக்கப்பட்டது.

**ஒலிப்பதிவு நாடா மற்றும் வெளியீடுகள் பிரிவு**

2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒலிப்பதிவு நாடா மற்றும் வெளியீடுகள் பிரிவு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துக்கு புதிதாக வருமானம் உழைக்கும் பணியொன்றாக 2014ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக செயற்பட்டது. 2014ஆம் ஆண்டில் தயாரித்துள்ள இறுவட்டுக்களுக்கிடையே சேர்க்கப்பட்ட புத்தம்புதிய இறுவட்டாக சந்தகன் வெடிலா மற்றும் ஹிந்திப் பாடல் ஆகியவற்றை அறிமுகம் செய்யலாம். இவற்றுக்கு மேலதிகமாக "குரல்" சஞ்சிகை இதழ்-03 2014ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் போன்றே முத்து பபளு, ஓலு பிபிலா, கிராமபோன பாடல், ஜன கீ, அபே அம்மா கொலம்ப கிஹில்லா ஆகிய இறுவட்டு நாடாக்களுக்கு நல்லதொரு கேள்வி காணப்பட்டது.

**சந்தைப்படுத்தல் பிரிவு**

சந்தைப்படுத்தல் பிரிவு 2014ஆம் ஆண்டில் ரூபா 453, 614, 182/- வை சந்தைப்படுத்தல் வருமானமாக உழைத்துள்ளது.

2014ஆம் ஆண்டிலும் "தேசத்துக்கு மகுடம்" தேசிய நிகழ்ச்சிக்கு ஒத்ததாக சம்பந்தப்பட்ட அமைச்சுத் திணைக்களங்களின் வகிபங்கு பற்றி மக்கள் விழிப், ட்டப்பட்டனர். வெசாக் பண்டிகையை முன்னிட்டு தெஹிவளை கல்கிஸ்ஸ வெசாக் வலயத்துக்கு ஊடகம் பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சந்தைப்படுத்தல் பிரிவு மேற்கொண்ட மேம்படுத்தல் நிகழ்ச்சிகள் பின்வருமாறு

**மக்களால் பாராட்டி**

ரமழானை முன்னிட்டு "நெலும் பொகுன" அரங்கில் ஏற்பாடு செய்த வைபவமானது முஸ்லிம் மக்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்களை தொடர்புபடுத்திக்கொண்டு சுபாவித கீதத்தை இளம் சந்ததியினருக்கிடையே பரப்பும் முகமாக சங்கீதக் கச்சேரிகளை ஒழுங்குசெய்து அழைப்புகளை பேராதனை பல்கலைக்கழகத்தையும் றுஹுனு பல்கலைக்கழகத்தையும் தொடர்புபடுத்திக் கொண்டு நற்பெயருடைய பங்களிப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டன. அரசாங்கப் பிரிவின் பங்களிப்புப் போன்றே தனியார் துறையில் பங்களிப்பையும் மேலும் வென்றெடுக்கும் முகமாக சதீபா விலைக்கோவை (Price Pass மூலோபாயம்) பின்பற்றப்பட்டது.

**சந்தைப்படுத்தல் பிரிவு**

2014ஆம் ஆண்டில் பொறியியல் பிரிவு மேற்கொண்ட முக்கிய பணியாவது கரகஹதென்னயில் ஒலிபரப்புக்கூடத்தை நவீனமயமாக்கம் பணிகளை ஆரம்பித்தமை ஆகும். இவ் ஒலிபரப்புக்கூடத்தில் புதிய கருவிகளை பொருத்துவதற்கு கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

கரகஹதென்ன எப்.எம். ஒலிபரப்புக்கூடத்தை புதுப்பிப்பதால் பின்வரும் முன்னேற்றங்கள் நிகழ உள்ளன.

01. ஒலிபரப்புத் தரம் மற்றும் கேட்போர் வலயங்கள் வளர்ச்சியடைதல்.
02. ஒலிபரப்புத் தரம் தரம்வாய்ந்ததாக விருத்தியடைதல்.
03. பிரதான மின்சாரம் துண்டிப்பின் போதும் கேட்போருக்கு இடைறு ஏற்படாதிருத்தல்.
04. கரகஹதென்ன ஒலிபரப்புக்கூடத்தின் அலைவரிசைகளை சீராக்கும்போது சம்பந்தப்பட்ட

அலைவரிசையின் பெயரும் அடையாளங்காணும் விபரங்களும் வானொலிக் கருவிகளிலும் கையடக்கத்தொலைபேசியின் திரையிலும் காட்சியளித்தல்.

05. புதிய ஒலிபரப்பு உபகரணங்களை “ரத்திலிருந்தும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல் மற்றும் செயற்பாட்டை அவதானிக்கக்கூடியதாக இருத்தல்.

டொறிங்டன் சதுக்க “மியை நவீன மயமாக்கும்போது கூட்டுத்தாபன கட்டிடங்களை உடைத்து அகற்ற வேண்டியேற்பட்டதால் புதியதொரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2014.05.05ஆம் திகதி அடிக்கல் வைத்து ஆரம்பிக்கப்பட்டதுடன் பொறியியல் பிரிவின்”ரண கண்காணிப்பின் கீழ் அதன் நிர்மாணப்பணிகள் 2014ஆம் ஆண்டு முழுவதும் நடைபெற்றது.

## <u>கேட்போர் ஆய்வுப் பிரிவு</u>

2012ஆம் ஆண்டில் ஆரம்பித்த வானொலி ஊடகம் பாவனை சம்பந்தமான வெளிக்கள ஆய்வு 2014ஆம் ஆண்டிலும் செயற்பட்டது.

வானொலிச் சேவை பற்றிய ஆய்வு 2014ஆம் ஆண்டு வரை செயற்பட்டது. வெளிக்கள ஆய்வு முறை விஞ்ஞானத்துக்கு அமைய வானொலி கேட்போர் 514. மாதிரி கொழும்பு, கம்பஹா, கண்டி, களுத்துறை, மாத்தளை, நுவரெலிய, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், அம்பாறை, குருணாகல், புத்தளம், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய 17 மாவட்டங்களில் ஆய்வுகளை மேற்கொண்டது. 16 வானொலிச் சேவைகள் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டன.

இவற்றுக்கு மேலதிகமாக வானொலி நிகழ்ச்சி தரத்தையும் தரரீதியாகவும் அளவீட்டு ரீதியாகவும் மதிப்பீடு செய்தல் 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நாளின் முக்கிய நிகழ்வுகள் அடங்கிய தகவல்களைப் பற்றி கேட்போரை விழிப்பூட்டும் நோக்குடன் அத்தகவல்களைத் தழுவி அறிக்கைகளைத் தயாரித்து சிங்களச் சேவைகளிலும் பிரதேசச் சேவைகளிலும் ஒலிபரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கேட்போர் ஆய்வுப் பிரிவு நிறைவேற்றுகின்ற மற்றொரு மகத்தான பணியாவது வானொலியைப் பற்றி கற்பதற்கு வருகின்ற பாடசாலைகளதும் பல்கலைக்கழகங்களதும் ஆய்வாளர்களுக்கு வானொலி வரலாறு சேவைகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆய்வு முறைகள் கேட்போர் பதில்கள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களையும் அறிவையும் வழங்குவதாகும்.

# கணக்குக் கூற்று

# 2014

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
நிதி நிலைமை பற்றிய கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | டிசம்பர் 31 2014 | டிசம்பர் 31 2013 |
|---|---|---|---|
| சொத்துகள் | | | |
| நடைமுறை அல்லாத சொத்துகள் | | | |
| ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 9 | 2,735,137,013 | 2,950,482,030 |
| பிற்போடப்பட்ட வரி வருமானம் | | 945,105 | 1,139,358 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை | | 142,180,474 | 20,884,033 |
| விற்பனைக்காக உள்ளவை | 10 | 1,000,000 | 1,000,000 |
| | | **2,879,262,593** | **2,973,505,421** |
| நடைமுறைச் சொத்துகள் | | | |
| இருப்புகள் | | 31,862,620 | 35,688,853 |
| வணிக மற்றும் ஏனைய வருமதி | 11 | 183,852,186 | 188,653,353 |
| வழிச்சரக்கு | | 5,501,811 | 3,448,443 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 12 | 101,096,412 | 18,046,256 |
| | | 322,313,029 | 245,816,906 |
| மொத்த சொத்துகள் | | **3,201,575,622** | **3,219,322,326** |
| சொத்துகளும் பொறுப்புகளும் | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| அரச மூலதனம் | | 307,386,085 | 307,386,085 |
| ஒதுக்கங்களின் மீள்மதிப்பீடு | | 14,421,999 | 14,421,999 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 13 | (290,331,449) | (219,291,349) |
| | | **31,476,635** | **102,516,735** |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | | | |
| வரையறுக்கப்பட்ட பயன் பொறுப்புகள் | | 222,655,326 | 188,323,835 |
| பிற்போடப்பட்ட வருமானம் (ஜப்பானிய நன்கொடை) | | 84,949,026 | 90,366,039 |
| அரச நன்கொடை | | 444,048,924 | 282,901,656 |
| திருகோணமலை நன்கொடை | | 1,897,474,699 | 2,075,243,796 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புகள் | | 85,864,191 | 65,647,681 |
| குத்தகைக் கணக்கு (வாகனங்கள்) | 14 | 4,494,231 | 12,756,311 |
| | | 2,739,486,397 | 2,715,239,318 |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| வணிக மற்றும் பிற சென்மதிகள் | 15 | 315,293,967 | 304,321,934 |
| நிதி அல்லாத பொறுப்புகள் | 16 | 115,318,623 | 97,244,339 |
| மொத்தப் பொறுப்புகள் | | 430,612,590 | 401,566,273 |
| மொத்த சொத்துகளும் பொறுப்புகளும் | | 3,201,575,622 | 3,219,322,326 |

1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் மற்றும் 1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான சட்டம் ஆகியவற்றுக்கு அமைவாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதிப்பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்டது.

.................... திகதி: 28.04.2015
திரு. லலித் ஹெட்டிகே
பணிப்பாளர் - நிதி

இந்த நிதிக் கூற்றைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த நிதிக்கூற்று 2015 ஏப்ரல் 06ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

............................. ...........................
நந்த முறுத்தெட்டுவேகம பணிப்பாளர் சபை
தலைவர் திகதி
திகதி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
விபரமான வருமானக் கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2014 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் இருந்தவாறு | 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் இருந்தவாறு |
|---|---|---|---|
| விற்பனைகள் | 1 | 538,486,063 | 517,749,399 |
| விற்பனைக் கிரயம் | 2 | 393,510,002 | 358,393,871 |
| **மொத்த இலாபம்** | | **144,976,061** | **159,355,528** |
| ஏனைய தொழிற்பாட்டு இலாபம் | 3 | 547,241,520 | 442,318,420 |
| விநியோகச் செலவுகள் | 4 | 81,066,276 | 61,323,918 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 5 | 326,026,131 | 363,632,260 |
| நிர்வாகச் செலவுகள் | 6 | 326,871,198 | 308,817,113 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **(41,746,024)** | **(132,099,342)** |
| நிதிச் செலவுகள் | 7 | 8,883,313 | 7,832,182 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **(50,629,337)** | **(139,931,525)** |
| வரிச் செலவுகள் | 8 | (20,410,763) | (20,691,814) |
| **வரிக்குப் பிந்திய இலாபம்** | | **(71,040,100)** | **(160,623,339)** |
| **மொத்த அனைத்து வருமானம்** | | (71,040,100) | (160,623,339) |

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
சொத்துகளில் மாற்றம் பற்றிய கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | வெளியிடப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 டிசம்பர் 31 இல் மீதி | | 307,386,085 | - | 14,421,999 | - | (75,806,365) | 246,001,719 |
| அனைத்து வருமானம் | | - | - | - | - | (160,806,365) | (160,806,365) |
| காலப்பகுதிக்கான முழு வருமானம் | | - | - | - | - | 17,138,355 | 17,138,355 |
| 2014 டிசம்பர் 31 இல் மீதி | | **307,386,085** | - | **14,421,999** | - | **(219,291,349)** | **102,516,735** |
| காலப்பகுதிக்கான விபரமான வருமானம் | | - | - | - | - | (71,040,100) | (71,040,100) |
| 2014 டிசம்பர் 31 இல் மீதி | | **307,386,085** | - | **14,421,999** | - | **(290,331,448)** | **31,476,635** |

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
காசுப்பாய்ச்சல் கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தொழிற்பாடுகளின் காசுப்பாய்ச்சல் | 2014 | |
|---|---|---|
| வரி மற்றும் வட்டிக்கு முந்திய தேறிய இலாபம் | | (50,629,337) |
| பின்வருவனவற்றுக்கான சீராக்கம் : | | |
| அரச மானிய காலத்தேய்மானம் | (62,272,581) | |
| திருகோணமலை மானிய காலத்தேய்மானம் | (177,769,097) | |
| தேய்வு | 50,005,060 | |
| தேய்வு - திருகோணமலை | 178,531,044 | |
| பணிக்கொடை ஏற்பாடு | 44,218,603 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | 2,541,373 | |
| சொத்துகள் கையுதிப்பு இலாபம் / நட்டம் | | |
| செலாவணி இலாபம் / நட்டம் | 170,572 | |
| குத்தகை வட்டி | 2,490,894 | |
| பொ.சே.க. | 6,273,298 | 44,189,166 |
| செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன் தொழிற்பாட்டு இலாபம் | | |
| இருப்பு அதிகரிப்பு / குறைவு | 3,806,233 | |
| வணிக மற்றும் ஏனைய வருமதிகள் அதிகரிப்பு / குறைவு | 2,206,428 | |
| வழிச்சரக்கு அதிகரிப்பு / குறைவு | (2,053,368) | |
| வணிக மற்றும் ஏனைய சென்மதிகள் அதிகரிப்பு / குறைவு | 16,485,451 | |
| நிதி அல்லாத பொறுப்புகள் அதிகரிப்பு / குறைவு | 11,800,986 | 32,245,730 |
| செலுத்திய பணிக்கொடை | | (10,104,537) |
| செலுத்திய வாடகை | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசு | | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் காசுப்பாய்ச்சல் | | |
| அரச மானியம் | 218,002,836 | |
| சொத்துகள் விற்பனை | | |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் கொள்வனவு | (13,191,090) | |
| செலுத்திய குத்தகை | (16,266,392) | |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | (121,196,219) | 67,349,135 |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய நிதி | | |
| வருமான ஒதுக்க சீராக்கம் | | |
| நிதிச் செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல் | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / குறைவு | | 83,050,156 |
| காலப்பகுதி ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | | 18,046,256 |
| காலப்பகுதி இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் | | **101,096,412** |

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

**1. பொதுத் தகவல்கள்**

**1.1 அறிக்கை செய்யும் அமைப்பு**

1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு தகுந்தவாறு கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை சுதந்திர சதுக்கம், கொழும்பு 07இல் கொண்டுள்ளதுடன் அதன் பிரதான வணிக நிலையம் சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 இல் அமைந்துள்ளது.

**1.2. பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

இவ்வாண்டில், கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடு ஒலிபரப்பு நேர விற்பனையாகும்.

**1.3. விடயத்துக்கான அதிகாரமளித்தல் திகதி**

2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் .......................................... ஆம் திகதி அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

**1.4. ஊழியர்களின் எண்ணிக்கை**

ஆண்டின் இறுதியில் இருந்தவாறு நிரந்தரமான ஊழியர்களின் எண்ணிக்கை 886 ஆகும். அத்துடன் ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்களின் எண்ணிக்கை 3 ஆகும்.
(31.12.2013 - 891)

**2.** தயாரிப்பின் அடிப்படையும் இலங்கைக் நிதி அறிக்கையிடல் நியமங்களை ஏற்றுக்கொள்ளுதலும் (**"SLFRS"**)

கூட்டுத்தாபனம் அதன் நிதிக்கூற்றுகளை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1995ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு ("SLFRS") நியமங்கள் சட்டத்தின் பிரகாரமும் தயாரிக்கின்றது.

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் ("SLFRS") புதிய தொகுதி ஒன்றை வெளியிட்டதுடன் 2012 ஜனவரி 01 ஆம் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் செயற்படும்படியாக இந்த நியமங்களைப் பிரயோகிக்குமாறு தொழில்முயற்சிகளைக் கோரியது.

**3.**

**3. 1.** முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறு. வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா ஆண்டுகளிலும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டன.

**3.1.1.** தயாரிப்பின் அடிப்படை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுகள் பின்வரும் குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ள வரலாற்று ரீதியான கிரயம் மற்றும் குறித்த அளவீடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் தாக்கம் செலுத்தும் பணவீக்கக் காரணிகளுக்கான எவ்வித சீராக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை. SLFRS இன் நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் திறனாய்வு சார்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகளின்

பயன்பாட்டைத் தேவைப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் நடவடிக்கையில் கூட்டுத்தாபனத்தின் தீர்ப்பைப் பிரயோகிப்பதற்கும் அது முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்றது. நிதிக்கூற்றுகளுக்கு ஊகங்களும் மதிப்பீடுகளும் முக்கியத்துவம் பெறும் விடயப் பரப்புகள் குறிப்பு 4இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுத் திகதியில் அறிக்கை செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொகைகளும் எதிர்பாராத சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கைக் காலப்பகுதிக்கான வருமானம் மற்றும் செலவின தொகைகளின் அறிக்கைகளும் தரப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகள் நடைமுறை நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய முகாமைத்துவத்தின் சிறந்த அறிவை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும், இறுதியில் உண்மையான பெறுபேறுகள் அந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

**3.1.2.** தொடர்ந்து இயங்கும் அமைப்பு

தொடர்ந்து இயங்கும் அமைப்பாக கூட்டுத்தாபனத்தின் இயலுமையை பணிப்பாளர்கள் மதிப்பிட்டதுடன் வணிகத்தை ஒழிப்பதற்கான அல்லது முடிவுறுத்துவதற்கான நோக்கம் அவர்களுக்கு இல்லை.

**3.1.3.** ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழும் எல்லா மூலப்பொருள் தொடர்பான நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து, நிதிக்கூற்றுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன / வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**3.1.4.** ஒப்பீட்டுத் தகவல்கள்

கூட்டுத்தாபனத்தினால் இடையறாது பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி, முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட வற்றுக்கு இசைவானவையாகும். சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்காக முன்னைய ஆண்டின் தொகைகளும் கட்டங்களும் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

**3.1.5.** வெளிநாட்டு நாணயங்கள்

(அ) செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் அமைப்பு தொழிற்படும் (தொழிற்பாட்டு நாணயம்) ஆரம்பப் பொருளாதாரச் சுற்றாடலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதிக் கூற்றுகள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயமாகிய இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன.

(ஆ) வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் அவை இடம்பெறும் திகதிகளில் நிலவும் அல்லது உருப்படிகள் அளவிடப்படும் மதிப்பீடுகளில் நாணய மாற்று வீதத்தைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவின் மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் படிநிலைப் பெறுமதி வழங்கப்பட்டுள்ள நாணயச் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் ஆண்டிறுதி நாணய மாற்று வீதத்தின் மாற்றத்தின் விளைவான அந்நியச் செலாவணி இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 3.2. ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.2.1. சொத்துகளும்அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படைகளும்

ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டவை கூட்டுத்தாபன வணிகத்தின் சாதாரண தொழிற்பாட்டுச் சுழற்சி அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் ஆகியவற்றில் எது குறுகியதோ அந்தக் காலப்பகுதியில் காசும் காசாக ஏற்பிசைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுபவையும் ஆகும். நடைமுறைச் சொத்துகள் அல்லாத சொத்துகள் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கும் மேலாக கூட்டுத்தாபனம் வைத்திருப்பதற்குக் கருதியுள்ள சொத்துகளாகும்.

### 3.2.1.1. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (PPE)

காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவை பிரதானமாக தலைமை அலுவலகத்தையும் பிராந்திய ஒலிபரப்பு நிலையத்தையும் உள்ளடக்கும். எல்லா ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும் வரலாற்றுக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளன. PPE யின் கிரயம் என்பது ஏதேனும் எதேச்சையான செலவினங்களுடன் சொத்துகளின் கருதப்பட்ட பயன்பாட்டுக்காக அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட கொள்வனவுக் கிரயம் ஆகும்.நிரந்தரத் தன்மையான சொத்துகளின் கொள்வனவு, நீடித்தல் அல்லது மேம்படுத்தல் மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து ஏற்படும் கிரயங்கள் உருப்படிகளுடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்குப் பாய்வதுடன் உருப்படியின் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக இருக்கும்போது மாத்திரம் அவை பொருத்தமானவாறு சொத்துகளின் கொண்டுசெல்லும் பெறுமதியில் உள்ளடக்கப்படுகின்றன அல்லது புறம்பான சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.2.1.2. மீள்நிலைப்படுத்தல் கிரயங்கள்

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதாரப் பயன்களை மீள்நிலைப்படுத்துவதற்காக அல்லது பேணுவதற்காக ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றின் திருத்தங்கள் மற்றும் பேணுகைக்காக ஏற்படும் செலவினம் ஏற்படும்போது அது செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.1.3. தேய்மானம்

காணி தேய்வடைவதில்லை. ஏனைய சொத்துகளின் தேய்மானத்துக்கான ஏற்பாடு எல்லா நிலையான சொத்துகளினதும் கிரயத்துக்கு / மீள்மதிப்பீட்டுத் தொகைகளுக்கு நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. இந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் பிரதான வருடாந்த வீதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடம் | 2.5% |
| பொறிகளும் இயந்திரங்களும் | 7.5% |
| செவிப்புல அலைவரிசைக் கருவி | 7.5% |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 10% |
| ஒலிபரப்புக் கருவி | 7.5% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| இசைக் கருவிகள் | 10% |
| கணனி உபகரணங்கள் | 50% |
| ஒலிப்பதிவு நாடாக்கள் | 33.33% |
| உதிரி உபகரணங்கள | 50% |

சொத்துகளின் ஈற்றுப் பெறுமதிகளும் பயன்மிக்க ஆயுட்காலமும் பொருத்தமாயின், ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கம் செய்யப்படுகின்றது.

சொத்துகளின் கொண்டு செல்லும் தொகை அதன் உத்தேச மீளப்படும் தொகையை விட அதிகமாயின், அது உடனடியாக குறைத்து எழுதப்படும்.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது நட்டம் அவற்றின் கொண்டு செல்லும் தொகையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதுடன் தொழிற்பாட்டு இலாபத்தை நிர்ணயிப்பதில் கணக்கில் கொள்ளப்படுகின்றன. மீள் மதிப்பிடப்பட்ட சொத்துகள் விற்பனை செய்யப்படும் போது, ஏனைய ஒதுக்கங்களில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் நிறுத்தி வைத்த வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றன.

**3.2.2.** நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை சாதனங்களின் திரண்ட கிரயங்களையும் சொத்தொன்றின் நிர்மாணத்துடன் நேடித் தொடர்புள்ள ஏனைய கிரயங்களையும் உள்ளடக்குகின்றது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை அது கணிசமான அளவு முடிவடைந்து அதன் கருதப்பட்ட பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளபோது சம்பந்தப்பட்ட சொத்துகள் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

**3.2.3** நிதிச்சொத்துகள்

**3.2.3.1.** வகைப்படுத்தல்

**3.2.3.2.** கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் சுறுசுறுப்பான சந்தையில் நிரல்படுத்தப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய சொத்துகளுடனான நேரிலியற்ற நிதிச் சொத்துகளாகும். அவை அறிக்கையிடும் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் 12 மாதங்களுக்கு அதிகமான முதிர்ச்சியைக் கொண்டவை நீங்கலாக, நடைமுறைச் சொத்துகளில் உள்ளடக்கப்படுகின்றன. இவை நடைமுறையல்லாத சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் கடன்களும் வருமதிகளும் "வணிக மற்றும் ஏனைய வருமதிகள்" மற்றும் "காசும் காசுக்குச் சமமானவையும்" ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. (குறிப்புகள் 3.8 மற்றும் 3.9)

**3.2.3.3.** விற்பனைக்காக இருக்கும் நிதிச் சொத்துகள்

விற்பனைக்காக இருக்கும் நிதிச் சொத்துகள் இந்த வகுதியில் நியமிக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் வகுதிகளின் வகைப்படுத்தப்படாத நேரிலியற்ற நிதிச்சொத்துகளாகும். அறிக்கை செய்யும் காலப்பகுதி முடிவடைந்து 12 மாதங்களினுள் முதலீடு முதிர்ச்சியடையாதவிடத்து அல்லது அதனைக் கையுதிர்ப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாதவிடத்து அவை நடைமுறையல்லாத சொத்துகளில் உள்ளடக்கப்படுகின்றன.

**3.2.3.4.** ஏற்பிசைவும் அளவீடும்

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நடுநிலைப் பெறுமானத்தில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் வருமானக் கூற்றில் செலவில்

இடப்படுகின்றன. முதலீடுகளிலிருந்து கிடைக்கும் காசுப் பாய்ச்சலுக்கான உரிமைகள் காலாவதியாகும்போது அல்லது உரிமைக்கான எல்லா இடர்களும் வெகுமதிகளும் கணிசமான அளவில் மாற்றப்பட்டுள்ளபோது, கழிக்கப்படுகின்றன. விற்பனைக்காக இருக்கும் நிதிச் சொத்துகளும் நடுநிலைப் பெறுமானத்தில் இலாபம் அல்லது நட்டம் ஊடான நிதிச் சொத்துகளும் பின்னர் நடுநிலைப் பெறுமானத்தில் கொண்டுசெல்லப்படுகின்றன. கடன்களும் வருமதிகளும் பின்னர் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி தேய்மானக் கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றன.

‘இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமானத்தில் நிதிச் சொத்துகள்’ வகுதியில் நியாயப் பெறுமானத்தின் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழுந்த காலப்பகுதியில் வருமானக் கூற்றில் ‘ஏனைய (நட்டங்கள்) / வருவாய்கள் - தேறியவை’ யின் கீழ் பதிவுசெய்யப்படும்.

விற்பனைக்காக இருப்பவையாக வகைப்படுத்தப்பட்ட நாணய மற்றும் நாணயமல்லாத நடுநிலைப் பெறுமானத்தின் மாற்றங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. விற்பனைக்காக இருப்பவையாக வகைப்படுத்தப்பட்ட பிணையங்கள் விற்கப்படும்போது அல்லது சேத இழப்பு ஏற்படும்போது, உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்படும் திரண்ட நடுநிலைப் பெறுமானச் சீராக்கல்கள் ‘முதலீட்டுப் பிணையங்களிலிருந்து இலாபங்கள் மற்றும் நட்டங்களாக’ வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்திக் கணிக்கப்படும் விற்பனைக்காக இருக்கும் பிணையங்கள் மீதான வட்டி ஏனைய வருமானங்களின் ஒரு பகுதியாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**3.2.3.5.** நிதிச் சொத்துகளின் சேத இழப்பு

(அ) காலத்தேய்மானக் கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் சொத்துகள்

ஒரு நிதிச் சொத்து மதிப்பிறக்கத்துக்கு உட்பட்டுள்ளதா என்பதற்கான உண்மையான சான்று உள்ளதா என அறிக்கை செய்யும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பீடு செய்கின்றது. சொத்தின் (ஒரு ‘நட்ட நிகழ்வு’) ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் நிகழும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துகளின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களில் தாக்கத்தைக் கொண்ட நட்ட நிகழ்வு (நிகழ்வுகள்) ஆகியவற்றின் விளைவாக மதிப்பிறக்கம் ஏற்பட்டதற்கான உண்மையான சான்று இருந்தால் மட்டுமே ஒரு நிதிச் சொத்தின் பெறுமதி இறக்கம் நிகழ்ந்து பெறுமதி இறக்க நட்டம் ஏற்படுகின்றது.

கடனாளி அல்லது கடனாளிகளின் ஒரு குழு கணிசமான அளவில் வட்டி அல்லது முதன்மைக் கொடுப்பனவில் நிதிப் பிரச்சினைகளை, ஒப்பந்த முறிவை அல்லது தவணை தவறுதல் ஆகியவற்றுக்கான குறிகாட்டிகள், வங்குரோத்து நிலை அல்லது ஏனைய நிதி ஒழுங்கீனத்துக்கு அவர்கள் உள்ளாவதற்கான வாய்ப்பு மற்றும் ஒப்பந்த முறிவுக்கு எதிரிணையான நிலுவைகளில் மாற்றங்கள் அல்லது பொருளாதார மாற்ற நிலைமைகள் போன்ற உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் அளவிடத்தக்க குறைவை அவதானிக்கக்கூடிய தரவுகள் குறித்துக்காட்டுதல் ஆகியவற்றை சேத இழப்புக்கான சான்றுகள் உள்ளடக்கும்.

கடன்கள் மற்றும் வருமதிகள் வகுதிக்காக,நட்டத்தின் அளவு சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் நிதிச் சொத்தின் மூல பயனுறுதியான வட்டி வீதத்தில் கழிவிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் தற்போதையப் பெறுமதிக்கும் (செலவிடப்படாத எதிர்கால கடன் நட்டங்களை உள்ளிட்ட) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது. சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி குறைக்கப்பட்டு நட்டத்தின் அளவு ஒன்றிணைக்கப்பட்ட வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒரு கடன் அல்லது முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடு வேறுபட்ட வட்டி வீதத்தைக் கொண்டிருப்பின், ஏதேனும் மதிப்பிறக்கத்தை அளவிடுவதற்காக கழிவு வீதம் ஏதேனும் மதிப்பிறக்க நட்டத்தை அளவிடுவதற்கான கழிவு வீதம் ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் நடைமுறையில் உள்ள பயனுறுதியான வட்டி வீதம் ஆகும். நடைமுறைச் செலவினம் ஒன்றாக, அவதானிக்கக்கூடிய சந்தை விலையைப் பயன்படுத்தி சாதனத்தின் நடுநிலைப் பெறுமானத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் மதிப்பிறக்கத்தை அளவிடலாம்.

அதனைத் தொடர்ந்து வரும் காலப்பகுதியில், மதிப்பிறக்க நட்டத்தின் தொகை குறைவடைந்து மதிப்பிறக்கம் ஏற்பிசைவு செய்யப்பட்டதன் பின்னர் இடம்பெறும் நிகழ்வொன்றுக்கு குறைவு உண்மையாக தொடர்புபடுத்தக்கூடியதாக இருப்பின் (கடனாளியின் கடன் வீதத்தில் ஓர மேம்பாடு போன்றவை), முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட மதிப்பிறக்க நட்டத்தின் திருப்பல் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**3.2.5.6.** வணிக வருமதிகள்

வணிக வருமதிகள் எதிர்பார்க்கப்பட்ட ஏற்பிசைவு செய்யக்கூடிய பெறுமதியில் கொண்டுசெல்லப்படுகின்றது. வருமதிகளின் மூல நியதிகளுக்கிணங்க, எல்லாத் தொகைகளையும் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாமல் போகும் என்பதற்கான உண்மையான சான்று இருக்கும்போது, மதிப்பிறக்க வணிக வருமதிகளுக்கான ஓர் ஏற்பாடு தாபிக்கப்படும். கடனாளியின் கணிசமான நிதியியல் பிரச்சினைகள்,கடனாளி வங்குரோத்து நிலைமைக்கு அல்லது நிதியியல் ஒழுங்கீனத்துக்கு மற்றும் கொடுப்பனவில் தவணை தவறுவதற்கு உள்ளாவார் என்பதற்கான சாத்தியம் வணிக வருமதிகள் இழப்புக்கு உள்ளாகும் என்பதற்கான குறிகாட்டிகளாகக் கருதப்படுகின்றன. படிக்கணக்கொன்றைப் பயன்படுத்துவதன் ஊடாக சொத்தின் கொண்டு செல்லும் தொகை குறைக்கப்படுவதுடன் விநியோகக் கிரயத்தினுள் விபரமான வருமானக் கூற்றில் நட்டத் தொகை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. வணிக வருமதிகள் அறவிட முடியாதுள்ளபோது, அது வணிக வருமதிக்கான படிக்கணக்கிற்கு எதிராகப் பதிவளிக்கப்படுகின்றது. முன்னர் பதிவளிக்கப்பட்டு அதன் பின்னர் கிடைக்கும் அறவீடுகள் வருமானக் கூற்றில் விநியோகக் கிரயத்துக்கு எதிராக வரவு வைக்கப்படுகின்றது.

வணிக வருமதிகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு அதன் பின்னர் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்டு சேத இழப்பு கழிக்கப்படுகின்றது.

**3.2.6.** சரக்குத்தொக்கு

குறைந்த கிரயத்தில் அல்லது நிகர தேறுகைத்தகு பெறுமானத்தில் கூறப்படுகின்றன. கிரயம் கொள்வனவு விலையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. நிகர தேறுகைத் தகு பெறுமதி என்பது பூர்த்தி செய்வதற்கான கிரயம் மற்றும் விற்பனைச் செலவினங்களைக் கழித்து வரும் சாதாரண வியாபார நடவடிக்கையின் போதான விற்பனை விலையின் மதிப்பீடாகும்.

**3.2.7.** காசும் காசுக்குச் சமமானவையும்

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமமானவையும் என்பது கையிலுள்ள காசு,வங்கியில் உள்ள அழைப்பு வைப்புகள், மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான மூல முதிர்ச்சிகளைக் கொண்ட ஏனைய குறுகிய கால அதி திரவத்தன்மையான முதலீடுகள் மற்றும் வங்கி மேலதிகப்பற்றுகள் ஆகியவற்றை உள்ளடக்கும். நிதி நிலைமைக் கூற்றுகளில், வங்கி மேலதிகப் பற்றுகள் நடைமுறைப் பொறுப்புகளில் கடன்களில் காட்டப்படும்.

**3.2.8.** கடன்பெறல் கிரயங்கள்

பொதுவான மற்றும் குறித்த கடன்பெறல் கிரயங்கள் தகைமைபெறும் சொத்துகளின் கொள்ளல், நிர்மாணம் அல்லது உற்பத்தியுடன் தொடர்பானவையாகும். அவை அவற்றின் கருதப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு அவசியமானவாறு கணிசமான காலம் தேவைப்படும் சொத்துகளாகும் என்பதுடன் அந்த சொத்துக்கள் அவற்றின் கருதப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு பெருமளவில் தயாராக இருக்கும் அத்தகைய காலம் வரை அந்தச் சொத்துகளின் கிரயத்தில் சேர்க்கப்படுகின்றன.

தகைமை பெறும் சொத்துகள் மீது செலவிடுவதற்காக வைத்துள்ள குறித்த கடனின் தற்காலிக முதலீட்டின் மீது ஈட்டப்படும் முதலீட்டு வருமானம் முதலீட்டாக்கத்துக்குத் தகைமை பெறும் கடன்பெறல் கிரயங்களிலிருந்து கழிக்கப்படும்.

ஏனைய எல்லா கடன்பெறல் கிரயங்களும் அவை நடைபெற்ற காலப்பகுதியில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.2.9.** நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்கியதாகும். வரி ஏனைய பூரணமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் உருப்படிகளின் அளவுக்கு அல்லது நேரடியாக உரிமையாண்மையுடன் முறையே தொடர்புபட்டாலன்றி, அது வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

அ) நடைமுறை வரி விதிப்பு

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடைமுறை வரிப் பொறுப்புகள் கூட்டுத்தாபனத்திற்கு எழுகின்றன. உண்மையான பொறுப்பைப் பிரதிபலிக்கின்றது என முகாமைத்துவம் கருதும் சொல்லப்பட்ட ஏற்பாடுகளைப் பிரயோகித்து நிதிக் கூற்றுகளில் இந்தப் பொறுப்புகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும் நிலைப்பாடுகளை வருமான அதிகாரிகள் ஆட்சேபிக்கின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. இந்த விடயங்கள் மீதான ஏதேனும் மேலதிக கிரயங்கள் பொறுப்பில் வரிச் செலவாக கணக்கிலிடப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

நடைமுறை ஆண்டுக்கும் முன்னைய காலப்பகுதிகளுக்குமான நடைமுறைச் சொத்துகளும் பொறுப்புகளும் உள்நாட்டு இறைவரி அதிகாரிகளிடமிருந்து பெறுவதற்கு அல்லது அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் தொகைகளில் அளவிடப்படுகின்றது. தொகையைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் ஐந்தொகைத் திகதியில் சட்டவாக்கம் செய்யப்படுகின்றன அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்படுகின்றன. நடைமுறை வரிக்கான ஏற்பாடு நிதிக்

கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டவாறு வருமான மற்றும் செலவினக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஆ) பிற்போடப்பட்ட வரி

நிதியியல் அறிக்கை செய்யும் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைக்கும் வரிவிதிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் தொகைக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்கு ஏற்பாடு செய்யும் ஐந்தொகை முறைமையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.வணிக இணைப்பு அல்லாததும் கணக்கீட்டையோ வரி விதிக்கக்கூடிய இலாபத்தையோ பாதிக்காததுமான கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்துகள் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப ஏற்பிசைவில் எழும் தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் திருப்பமடையாது என எதிர்பார்க்கப்படும் முதலீட்டு கீழ்நிலை உரிமம் தொடர்பான வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. மேலும் நல்லெண்ணத்தின் ஆரம்ப ஏற்பிசைவில் எழும் தற்காலிக வேறுபாடுகளுக்கு பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. அறிக்கைத் திகதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வேறுபாடுகள் திரும்பல் அடைகின்றபோது, அவற்றுக்குப் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதத்தில் பிற்போடப்பட்ட வரி அளவிடப்படுகின்றது. நடைமுறை வரிப் பொறுப்புகளையும் சொத்துகளையும் எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியான வலுவூட்டக்கூடிய உரிமை இருப்பதுடன் அதே வரி விதிக்கக்கூடிய தொழில் முயற்சியின் மீது அதே வரி அதிகாரிகளினால் விதிக்கப்படும் வருமான வரிகளுடன் அது தொடர்புபடுமாயின், பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

எதிர்கால இலாபங்களுக்கு எதிராக தற்காலிக வேறுபாடுகளைப் பயன்படுத்த முடியுமானவாறு அவை கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளபோது மட்டுமே பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கை செய்யும் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்பான வரிப் பயன்கள் இனிமேலும் கிடைக்காது என்னும் அளவுக்கு அது குறைக்கப்படுகின்றது.

**3.2.10.** ஊழியர் பயன்கள்

**3.2.10.1.** இளைப்பாறல் பயன் கடப்பாடுகள்

அ) வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - ஓய்வுப் பணிக்கொடை ஏற்பாடு ஒரு வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் அல்லாத தொழிலுக்குப் பிந்திய பயன் திட்டமாகும்.வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பொறுப்பு அறிக்கை செய்யும் திகதியில் வரையறுக்கப்பட்ட கடப்பாட்டின் தற்போதையப் பெறுமதி ஆகும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடு எதிர்பார்க்கப்பட்ட அலகுச் செலவுப் பதிவு முறையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலுக்கு கழிவு வழங்குவதன் மூலம் பயன்கள் செலுத்தப்படுகின்றது தொடர்பான பொறுப்பின் காலப்பகுதிக்கு சுமாரான முதிர்ச்சியைக் கொண்டதுமான நிர்ணயிக்கப்படும் வட்டி

வீதத்தைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது.

இளைப்பாறல் பயன் கிரயங்கள் பற்றிய SLAS 16 (2006ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட) இற்கு அமைவாக எல்லா ஊழியர்களினதும் சேவையின் முதல் வருடத்திலிருந்து ஒய்வுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், 5 வருட சேவையைப் பூர்த்திசெய்யும்போது மாத்திரமே ஒரு ஊழியருக்கான பொறுப்பு எழுகின்றது.

பொறுப்பு புற நிதியிடப்பட்டதல்ல. ஆயுட்காலமுறை மதிப்பீட்டாளரின் ஊகங்கள் பின்வருவற்றை உள்ளடக்கும்:

01. வட்டி வீதம் 11%
02. சம்பள அதிகரிப்பு வீதம்5%
03. எல்லா ஊழியர்களினதும் இளைப்பாறல் வயது: 60 வருடங்கள்

அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ''ஊழியர் சேமலாப நிதியம்'' மற்றும் ''ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்''

''ஊழியர் சேமலாப நிதியம்'' மற்றும் ''ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்'' ஆகியவற்றைப் பெறுவதற்கு தகைமையுள்ள எல்லா ஊழியர்களும் சம்பந்தப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதியங்களினால் உள்ளடக்கப்படுவர். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான ஊழியர்களின் பங்களிப்புகள் அவை நிகழும்போது வருமானக் கூற்றில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.2.11.** அரசாங்கக் கொடைகள்

கொடைகள் கிடைக்கப்பெறும் எனவும் அதனுடன் இணைந்த எல்லா நிபந்தனைகளுக்கும் கூட்டுத்தாபனம் இணங்கி ஒழுகும் எனவும் நியாயமான உத்தரவாதம் காணப்படுமிடத்து அரங்கக் கொடைகள் நடுநிலைப் பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

கிரயங்கள் தொடர்பான அரசாங்கக் கொடைகள் அவை ஈடுசெய்வதற்குக் கருதப்பட்ட கிரயங்களுடன் ஒப்பிடுவததற்கு அவசியமான காலப்பகுதியில் பிற்போடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான அரசாங்க கொடைகள் பிற்போடப்பட்ட அரசாங்கக் கொடைகளாக நடைமுறை அல்லாத பொறுப்புகளில் உள்ளடக்கப்பட்டு தொடர்பான சொத்துகளின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலங்களில் நேர்கோட்டு அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது.

**3.2.12.** ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்காலத்தில் சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு கூட்டுத்தாபனத்தில் காணப்பட்டு, கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு பொருளாதாரப் பயன்களுடன் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படும் என்னும் சாத்தியம் காணப்படுவதுடன் கடப்பாடுகளின் அளவின் நம்பத்தகுந்த ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள முடியுமாக உள்ளபோது ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.2.13.** நிகழ்தகு பொறுப்புகள் மற்றும் நிகழ்தகு சொத்துகள்

ஒரு நிகழ்தகு பொறுப்பு என்பது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழ்வதால் அல்லது நிகழாது விடுவதால் உறுதிப்படுத்தப்படும் கடந்தகால நிகழ்வுகளின் இருப்பிலிருந்து எழும் வாய்ப்பான கடப்பாடு அல்லது கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் சாத்தியமற்ற காரணத்தினால், ஏற்பிசைவு செய்யப்படாத தற்போதைய கடப்பாடு ஆகும். நம்பத்தகுந்தவாறு அளவிட முடியாத பொறுப்பு இருக்குமிடத்து மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலும் நிகழ்தகு பொறுப்பு எழுகின்றது. கூட்டுத்தாபனம் நிகழ்தகு பொறுப்புகளை ஏற்பிசைவு செய்வதில்லை. ஆனால், நிதிக்கூற்றுகளில் அதன் இருப்பை வெளிப்படுத்துகின்றது.

ஒரு நிகழ்தகு சொத்து என்பது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழ்வதால் அல்லது நிகழாது விடுவதனால் அதன் இருப்பு உறுதிப்படுத்தப்படும் கடந்தகால நிகழ்வுகளிலிருந்து எழுகின்றது. கூட்டுத்தாபனம் நிகழ்தகு சொத்துகளை ஏற்பிசைவு செய்வதில்லை. ஆனால், அதன் பொருளாதாரப் பயன்கள் உள்நோக்கிப் பாய்வதற்கான வாய்ப்பு உள்ள போது ஆனால் அது நிச்சயமற்ற நிலையில் அது இருப்பதை வெளிப்படுத்துகின்றது.

**3.2.14.** வணிக சென்மதிகள்

வணிக சென்மதிகள் சாதாரண வணிக நடவடிக்கைகளின்போது வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக கொடுப்பனவை மேற்கொள்வதற்கான கடப்பாடு ஆகும். கொடுப்பனவு ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதியில் (அல்லது சாதாரண வணிகச் செயற்பாட்டுச் சுழற்சியில் அதிக காலமாயின்) நிலுவையாக இருப்பின், செலுத்த வேண்டிய கணக்குகள் நடைமுறைப் பொறுப்புகளில் வகைப்படுத்தப்படுகின்றன. இன்றேல், அவை நடைமுறை அல்லாத பொறுப்புகளாக முன்வைக்கப்படுகின்றன.

வணிக சென்மதிகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி காலத்தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

**3.2.15.** நிதிக்குத்தகைக் கடப்பாடுகள்

குத்தகை உருப்படிகளின் இடைநேர்விளைவான எல்லா இடர்களையும் பயன்களையும் கணிசமான அளவில் பயனுறுதியாக கூட்டுத்தாபனத்துக்கு மாற்றும் நிதிக்குத்தகை ஆதனம், பொறி மற்றும் உபகரணம் குத்தகை ஆதனத்தின் நடுநிலைப் பெறுமானத்தில் ஆரம்பத்தில் முதலீட்டாக்கம் செய்யப்படுகின்றது அல்லது குறைவாயின், ஆரம்பத்தில் குத்தகைக் கொடுப்பனவின் ஆரம்பத்தில் இருந்த அதி குறைந்த குத்தகைக் கொடுப்பனவின் தற்போதையப் பெறுமதியிலிருந்து திரண்ட தேய்மானத்தைக் கழித்து முதலீட்டாக்கம் செய்யப்படுகின்றது.

செலுத்த வேண்டிய மொத்த வட்டி இடைநிறுத்தத்தில் கணக்கிடப்படுகின்றது. ஒத்திசைவான கடன் குத்தகையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையாக பதிவு செய்யப்படுகின்றது.

ஆண்டுக்கான வட்டிக் கட்டணம் வட்டி ஒதுக்கக் கணக்கிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகின்றது.

**3.2.16.** வருமானக் கூற்று

**3.2.16.1.** வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய பதிலிறுப்பின் நடுநிலைப் பெறுமானத்தில் அளவிடப்படுவதுடன் வழங்கிய சேவைகள், சொல்லப்பட்ட தேறிய கழிவுகள் மற்றும் சேர் பெறுமதி வரிகள் ஆகியவற்றுக்காகக் கிடைக்க வேண்டிய தொகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வருமானத் தொகை நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக உள்ள போது எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்குப் பாய்வதற்கான சாத்தியம் உள்ளபோது கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் குறித்த தகவு நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படுகின்றபோது கூட்டுத்தபனம் வருமானத்தை ஏற்பிசைவு செய்துகீழே விபரிக்கப்பட்டவாறு வாடிக்கையாளரின் வகை, கொடுக்கல் வாங்கலின் தன்மை மற்றும் ஒவ்வொரு குறித்த ஒழுங்கையும் கவனத்தில் கொண்டு கூட்டுத்தாபனம் அதன் உத்தேச திரும்பலை வரலாற்றுப் பெறுபேறுகளில் அடிப்படையாகக் கொள்கின்றது.

**(அ) ஒலிபரப்பு நேர விற்பனை**

வருவாய் ஒலிபரப்பு நேர விற்பனையை உள்ளடக்குகின்றது. விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுகின்றபோது ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம் ஏற்பிசைவுசெய்யப்படுகின்றது.

**(ஆ) வட்டி வருமானம்**

அறவிடக்கூடிய தன்மை சந்தேகத்துக்குரியதாக இல்லாதவிடத்து, வட்டி வருமானம் கால அடிப்படையில் திரண்ட வட்டியாக (சொத்தின் பயனுறுதியான விளைவை கவனத்தில் கொண்டு) ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனை மீதான தேறிய இலாபம் அல்லது நட்டம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் தேறிய விற்பனை வருவாய் கொண்டு செல்லும் தொகையுடன் ஒப்பிட்டு நிர்ணயிக்கப்படுவதுடன் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**ஈ) ஏனைய வருமானம**

ஏனைய எல்லா வருமானங்களும் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.2.17.1.** செலவின ஏற்பிசைவு

**அ) செயற்பாட்டுச் செலவினங்கள்**

ஏற்பட்ட கிரயம் மற்றும் குறித்த வருமான உருப்படியின் வருவாய் ஆகியவற்றுக்கிடையிலான நேரடி தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவினம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஆண்டுக்கான இலாபத்தை / (நட்டத்தைக்) கணிப்பதில் வினைத்திறன் மிக்க நிலையில் வணிகத்தை நடத்தி ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தைப் பேணுவதில் ஏற்படும் எல்லாச் செலவினமும் வருமானத்தில் விதிக்கப்படுகின்றது. அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கும் தெரிந்த எல்லாப் பொறுப்புகளுக்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துக்கான தேய்வுகளுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆ) நிதிச் செலவுகள்**

வட்டிச் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கடன்பெறல் கிரயங்கள் அவை நிகழ்ந்த காலப்பகுதியில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.2.18. ஒப்பீடுகள்**

அவசியமானவிடத்து, நடைமுறை ஆண்டில் சமர்ப்பிப்புகளின் மாற்றத்துக்கு இசைவாக ஒப்பீட்டு எண்ணிக்கைகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

**4.** திறனாய்வு சார்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகளும் சீராக்கல்களும்

அறிக்கைத் திகதியில் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கைசெய்யப்பட்ட சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் மற்றும் நிகழ்தகு பொறுப்புகள் ஆகியவற்றின் வெளிப்படுத்தல்களில் தாக்கம் செலுத்தும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள். எவ்வாறாயினும், இந்த ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை எதிர்காலத்தில் ஏற்படும் சொத்துகள் அல்லது பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைகளில் சாதன சீராக்கலைத் தேவைப்படுத்தும் விளைவை ஏற்படுத்தக்கூடும்.

தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் ஆகியவை சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக நம்பப்படும் வரலாற்று ரீதியான அனுபவத்தையும் பல்வேறு ஏனைய விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். அதன் விளைவுகள் ஏனைய மூலங்களிலிருந்து உடனடியாக அடையாளம் காணக்கூடிய சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிகழ்தகு பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைகள் பற்றிய தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்கான அடிப்படைகளாக ஆகின்றன.

தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அடிநிலையான ஊகங்கள் ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், அந்தக் காலப்பகுதியை அல்லது திருத்தக் காலப்பகுதியை மட்டும் பாதிக்குமாயின் மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியிலும் திருத்தம் நடைமுறைக் காலம் எதிர்காலம் ஆகிய இரண்டையும் பாதிக்குமாயின் எதிர்காலத்திலும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்ட SLAS இன் பிரயோகத்தில் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் நிதிக்கூற்றில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

**(அ) ஓய்வூதியப் பயன்கள்**

ஓய்வூதியக் கடப்பாடுகளின் தற்போதையப் பெறுமதி பல்வேறு ஊகங்களைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் பல்வேறு காரணங்களில் தங்கியுள்ளது. ஓய்வூதியத்துக்கான தேறிய கிரயத்தை (வருமானம்) நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படும் ஊகங்கள் கழிவு வீதத்தை உள்ளடக்குகின்றன. இந்த ஊகங்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள் ஓய்வூதியக் கடப்பாடுகளின் கொண்டு செல்லும் தொகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் பொருத்தமான கழிவு வீதத்தை கூட்டுத்தாபனம் நிர்ணயிக்கின்றது. ஓய்வூதியக் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படும் உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதையப் பெறுமதியை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வட்டி வீதம் இதுவாகும். பொருத்தமான கழிவு வீதத்தை நிர்ணயிப்பதில், கூட்டிணைந்த முறிகளின் வட்டி வீதத்தை கூட்டுத்தாபனம் கவனத்தில் கொள்கின்றது. ஓய்வூதியக் கடப்பாடுகளுக்கான ஏனைய பிரதான ஊகங்கள் பகுதியளவில் தற்போதைய சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

**(ஆ) வருமான வரிகள்**

கூட்டுத்தாபனம் வருமான வரிக்கு உட்பட்டுள்ளது. வருமான வரிகளுக்கான ஏற்பாட்டை நிர்ணயிப்பதில் முக்கியமான தீர்மானம் தேவைப்படுத்தப்படுகின்றது. இறுதியான வரி நிர்ணயம் நிச்சயமற்ற பல கொடுக்கல் வாங்கல்களும் கணிப்பீடுகளும் உள்ளன. மேலதிக வரிகள் செலுத்தவேண்டி ஏற்படுமா என்னும் மதிப்பீட்டின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட வரிக் கணக்காய்வு விடயங்களுக்கான பொறுப்புகளை கூட்டுத்தாபனம் ஏற்பிசைவு செய்கின்றது.இந்த விடயங்களின் இறுதியான வரி விளைவு ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளை விட வேறுபடுமிடத்து, அத்தகைய வேறுபாடுகள் அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மீது தாக்கம் செலுத்தும்.

**5.** நிதி இடர் முகாமைத்துவம்

**5.1** நிதி இடர் காரணிகள்

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அதனை பல்வேறு நிதி இடர்களுக்கு இட்டுச்செல்கின்றது: சந்தை இடர் (நாணய இடர், காசுப்பாய்ச்சல் வட்டி வீத இடர் மற்றும் விலை இடர் ஆகியவற்றை உள்ளிட்ட), கடன் இடர் மற்றும் திரவத்தன்மை இடர். கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றத்தில் வாய்ப்பான மிக மோசமான தாக்கங்களைக் குறைப்பதற்கு கவனம் செலுத்துகின்றது.

நிதி முகாமைத்துவம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் நிதித் திணைக்களம் ஒன்றினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அ) சந்தை இடர்கள்

**(i)** வெளிநாட்டுச் செலாவணி இடர்

கூட்டுத்தாபனம் தேவையான உபகரணங்களை சர்வதேச ரீதியில் இறக்குமதி செய்கின்றது. அது பல்வேறு நாணயங்கள் தொடர்பாக, குறிப்பாக ஐக்கிய அமெரிக்க டொலர் தொடர்பாக எழும் வெளிநாட்டுச் செலாவணி இடரை எதிர்நோக்குகின்றது. எதிர்கால வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து எழும் தமது வெளிநாட்டுச் செலாவணி இடரை முகாமைத்துவம் செய்வதற்கு கூட்டுத்தாபனம் உள்நாட்டு முகவர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றது.

**(ii)** விலை இடர்

குழு பண்ட விலை வரியை எதிர்நோக்குகின்றது. கூட்டுத்தாபனம் பிரதான வழங்குனர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு இடரைக் குறைக்கின்றது.

**(iii)** கடன் இடர்கள்

பிரதானமாக வணிக வருமதிகளிலிருந்து கடன் இடர் ஏற்படுகின்றது. கூட்டுத்தாபனம் சேவையை வழங்குவதற்கு முன்னர் அதன் புதிய வாடிக்கையாளர் ஒவ்வொருவரினதும் கடன் இடரை முகாமைத்துவம் செய்வதற்கும் பகுப்பாய்வதற்குமான பொறுப்பைக் கொண்டுள்ளது.

கடன் இடர்கள் காசும் காசுக்குச் சமமானவையும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புகள் ஆகியவற்றிலிருந்தும் அவ்வாறே வாடிக்கையாளர்களின் வருமதிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் கடன் இடர் எழுகின்றது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரை,'A' தரத்தைக் கொண்ட சுயாதீனமாக தரப்படுத்தப்பட்ட தரப்புகள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இடர் கட்டுப்பாடு வாடிக்கையாளரின் நிதி நிலைமை, கடந்தகால அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளைக் கவனத்தில் கொண்டு கடன் தரத்தை மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட இடர் வரையறைகள் உள்ளக மற்றும் புற தரமிடல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. கடன் வரையறைகளைப் பயன்படுத்தல் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றது.

**iv)** திரவத்தன்மை இடர்கள்

கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மைத் தேவைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றது. அத்தகைய எதிர்வுகூறல் கூட்டுத்தாபனத்தின் கடன் நிதியிடல் திட்டங்கள் உடன்படிக்கைகளுக்கு இணங்கி ஒழுகுதல் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்கின்றது. செயற்படு மூலதன முகாமைத்துவத்திற்குத் தேவையான மீதிக்கு மேலதிகமாக வைத்திருக்கும் மிகையான காசு கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான முதிர்ச்சியைக் கொண்ட வட்டி வருமானத்தை ஈட்டுவதற்காக கால வைப்புக்கு மாற்றப்படுகின்றது.

**6.** தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

| *தொடர்பாளர் பெயர்* | *பதவி* | *கொடுக்கல் வாங்கலின் தன்மை* |
|---|---|---|
| திரு. நந்த முறுத்தெட்டுவேகம | தலைவர் | இல்லை |
| திரு. டபிள்யு. ஜயசிறி | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |
| தீபிகா பிரியதர்'னி பீரிஸ் | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |
| திருமதி சந்திரிகா குலதிலக | திறைசேரி உறுப்பினர் | இல்லை |
| டாக்டர். அருந்ததி ஸ்ரீரங்கநாதன் | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |
| திரு. கித்சிறி சமரசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |

குறிப்பு 1

வருவாய்

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| ஒலிபரப்பு நேர விற்பனை ஆசிய சேவை | 17,525,053 | 19,156,921 | | 19,156,921 |
| T.W.R. ஒலிபரப்பு நேர விற்பனை | 77,034,801 | 78,121,561 | | 78,121,561 |
| தேசிய சேவை ஒலிபரப்பு நேர விற்பனை | 431,226,096 | 398,178,327 | 1,972,590 | 396,205,737 |
| உற்பத்திக் கட்டணம் -தேசிய சேவை | 4,863,033 | 5,103,667 | 72,500 | 5,031,167 |
| மரண அறிவித்தல்கள் | 4,322,106 | 4,513,474 | | 4,513,474 |
| BBC ஒலிபரப்பு நேர விற்பனை | 11,317,400 | | | 11,317,400 |
| FEBA ஒலிபரப்பு நேர விற்பனை | 3,382,704 | 1,358,049 | | 1,358,049 |
| PCJ வருமானம் | 132,270 | | | |
| சிற்றி அன் கில்ட் கற்கைநெறிக் கட்டணம் | | | | |
| | **538,486,063** | **517,749,399** | **2,045,090** | **515,704,309** |

குறிப்பு 2

விற்பனைக் கிரயம்

| விபரம் | 2014 | 2013 |
|---|---|---|
| சம்பளம், வேதனம், படி | 195,667,088 | 173,365,646 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு | 26,583,887 | 21,797,452 |
| ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு | 4,924,964 | 4,588,106 |
| பணியாளர் மேலதிக வேலை | 1,517,627 | 7,336,580 |
| போக்குவரத்து மற்றும் பிரதியீடு | 773,952 | 845,154 |
| நிகழ்ச்சித்திட்டச் செலவு | 7,212,010 | 6,033,369 |
| தொலைபேசி | 2,325,369 | 1,589,542 |
| நிவாரண பணியாளர்கள் | 14,569,139 | 16,214,567 |
| வாகன ஓட்டச் செலவு | 7,785,725 | 7,418,629 |
| பராமரிப்புக் கிரயம் | 12,853,663 | 3,168,678 |
| மின்சாரம் | 112,512,994 | 115,946,922 |
| சேமநலன் | | 89,226 |
| ஏனைய செலவினங்கள் | 6,783,584 | |
| | **393,510,002** | **358,393,871** |

குறிப்பு 3

ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கடன்களுக்கான வட்டி | 2,936,467 | 10,558,231 | | 10,558,231 |
| பலவின வருவாய் (வேறு) | 51,623,952 | 50,497,496 | (270,068) | 50,767,565 |
| திரும்பிய காசோலைகள் தண்டம் | 25,774 | 49,493 | | 49,493 |
| வீட்டுக்கூலி | 20,951 | 2,782 | (25,788) | 28,569 |
| விசேட ஒலிப்பதிவுகள் | 207,086 | 172,388 | | 172,388 |
| தாமதித்த உரிமத்துக்கான தண்டம் | 8,571 | 285 | | 285 |
| இறக்குமதியாளர்கள், வியாபாரிகள், ஒன்றுகூட்டுவோர், திருத்துனர் உரிமம் | 8,715,940 | 9,398,973 | (13,640) | 9,412,613 |
| கெசற் விற்பனை | 1,073,715 | 6,395,905 | | 6,395,905 |
| தண்டக்கணக்கு | 1,799 | 5,000 | 5,000 | |
| சுற்றுலா விடுதி வருமானம் - அம்பேவெல | 802,954 | 998,625 | | 998,625 |
| வெளியீடுகள் விற்பனை | 227,767 | 198,108 | | 198,108 |
| வருமானம் - திருகோணமலை கருத்திட்டம் | 23,394,866 | (10,369,767) | | (10,369,767) |
| உப மொத்தம் | **89,039,842** | **67,907,519** | **(304,496)** | **68,212,015** |
| அரச மானியம் இலதாக்கல் | 62,272,581 | 75,624,269 | | 75,624,269 |
| திருகோணமலை மானியம் இலதாக்கல் | 177,769,097 | 177,769,097 | | 177,769,097 |
| உரிமக்கட்டணத்துக்காக அரச மானியம் | 218,160,000 | 96,020,000 | | 96,020,000 |
| ஆட்சேர்ப்பு செலவினத்துக்கான அரச கொடை | | 24,997,535 | | 24,997,535 |
| உப மொத்தம் | **458,201,678** | **374,410,901** | - | **374,410,901** |
| முழு மொத்தம் | **547,241,520** | **442,318,420** | **(304,496)** | **442,622,916** |

3.1) வானொலி உரிமத்துக்குப் பதிலாக அரசிடமிருந்து ரூபா 218.16 மில்லியன் கிடைத்து.

குறிப்பு 4

விநியோகக் கிரயம்

| | 2014 | 2013 |
|---|---|---|
| வணிக மேம்பாட்டுச் செலவு | 3,452,297 | 1,181,919 |
| ஒலிபரப்பு நேர விற்பனை தரகுப்பணம் (உள்நாடு) | 55,645,241 | 54,615,635 |
| ஒலிபரப்பு நேர விற்பனை தரகுப்பணம் (வெளிநாடு) | 2,062,577 | 2,897,304 |
| அவசர நிகழ்ச்சிக் கட்டணம் | | 18,000 |
| அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு | 2,541,373 | 416,534 |
| உரியச் செலவினம் | 17,364,788 | 2,194,526 |
| | **81,066,276** | **61,323,918** |

குறிப்பு 5

ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டச் செலவு | 4,076,399 | 5,773,617 | | 5,773,617 |
| வெளி ஒலிபரப்பு நிலைய பங்களிப்பு | 2,434,285 | 2,935,220 | | 2,935,220 |
| செய்திச்சேவை மற்றும் செய்திச் சுருக்கம் | 1,114,865 | 722,940 | | 722,940 |
| விளம்பரங்களும் பிரச்சாரமும் | 583,665 | 1,016,042 | | 1,016,042 |
| மின்சாரமும் மின்வலுவும் | 19,995,905 | 15,449,666 | (1,054,721) | 16,504,387 |
| தபால் கட்டணம், தந்தி, தொலைபேசி | | | | |
| (i) முதல் (ii) வரை | 8,973,145 | 9,607,300 | | 9,607,300 |
| அச்சிடல் மற்றும் எழுதுகருவிகள் | 5,261,523 | 6,765,180 | | 6,765,180 |
| மோட்டார் வாகன ஓட்டச் செலவு | 13,684,531 | 19,238,569 | | 19,238,569 |
| ஒலிபரப்புக் கருவி திருத்தம், பேணல் | 1,819,239 | 11,755,291 | | 11,755,291 |
| இசைக்கருவி திருத்தம், பேணல் | 56,100 | 13,200 | | 13,200 |
| தளபாடம் பொருத்துதல், திருத்தம், பேணல் | 8,254,443 | 2,467,247 | | 2,467,247 |
| கட்டிடம் தோட்டம் - திருத்தம், பராமரிப்பு | 3,610,881 | 14,317,756 | 314,297 | 14,003,459 |
| தேய்வு | 50,005,060 | 68,459,187 | 2,218,881 | 66,240,306 |
| தேய்வு - திருகோணமலை | 178,531,044 | 178,044,930 | | 178,044,930 |
| வரிவிதிப்பு (பொரு. சேவைக் கட்டணம்) | 6,273,298 | 5,839,153 | | 5,839,153 |
| நேயர் ஆய்வு மற்றும் சந்தை ஆராய்ச்சி | 13,600 | 176,280 | | 176,280 |
| வாகன வாடகை கட்டணம் | 6,203,846 | 962,940 | | 962,940 |
| முத்திரைக் கட்டணம் | 134,303 | 26,027 | | 26,027 |
| வானொலி அலைவரிசைக் கட்டணம் | 15,000,000 | 20,061,714 | | 20,061,714 |
| | **326,026,131** | **363,632,260** | **1,478,458** | **362,153,802** |

குறிப்பு 6

நிர்வாகச் செலவு

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| படிகள் - கூ.தா. தலைவர், ப.ச. உறுப்பினர் | 2,069,200 | 1,788,500 | | 1,788,500 |
| சம்பளங்கள், வேதனங்கள், படிகள் | 158,625,985 | 163,087,801 | (294,745) | 163,382,546 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு | 26,316,412 | 27,997,533 | | 27,997,533 |
| ஊழியர் ந.நி. பங்களிப்பு | 5,655,096 | 5,366,608 | | 5,366,608 |
| பணியாளர் மேலதிக வேலை | 19,244,178 | 9,005,624 | | 9,005,624 |
| நிவாரணப் பணியாளர்கள் | 19,202,221 | 18,018,341 | | 18,018,341 |
| ஒப்பந்தப் பணியாளர் வேதனம் | 29,505,949 | 29,728,773 | | 29,728,773 |
| பணியாளர் பயிற்சிக் கட்டணம் (உள்நாடு) | 42,500 | 44,500 | | 44,500 |
| போக்குவரத்து மற்றும் பிரதியீடு | 1,669,304 | 1,643,625 | | 1,643,625 |
| விடுமுறை தின சம்பளம் | 2,490,725 | 2,905,158 | | 2,905,158 |
| பணிக்கொடை | 44,218,603 | 33,506,189 | | 33,506,189 |
| தலைவரின் உபசரிப்பு | 730,702 | 376,483 | | 376,483 |
| பணிப்பாளர் சபையின் உபசரிப்பு | 233,567 | 166,385 | | 166,385 |
| சேமநலன் | 1,277,041 | 1,783,784 | | 1,783,784 |
| மருத்துவச் சேவை | 157,890 | 379,873 | | 379,873 |
| பொதுக்கட்டணங்கள் | 1,705,107 | 1,293,468 | | 1,293,468 |
| வாடகை, வீதம், வரிகள் | 7,035,380 | 7,313,859 | | 7,313,859 |
| காப்புறுதி | 2,428,299 | 1,925,451 | | 1,925,451 |
| கணக்காய்வுக் கட்டணம் | 550,000 | 600,000 | | 600,000 |
| சட்டக் கட்டணங்கள் | 2,039,208 | 802,453 | | 802,453 |
| வெளியீடுகளும் பருவ இதழ்களும் | 455,222 | 508,197 | | 508,197 |
| பணிக்கொடை, நீதிமன்ற கட்டண தண்டம் | 1,218,609 | 574,508 | | 574,508 |
| | **326,871,198** | **308,817,113** | **(294,745)** | **309,111,858** |

6.1) 2014ஆம் ஆண்டில் பணியாளர் தொகுதி உறுப்பினர்களின் உறவினர்களின் மரண அறிவித்தல்களுக்காக கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 290,268 செலவு ஏற்பட்டது. இந்த விளம்பரங்கள் தற்போது வலுவில் உள்ள திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இது ஒவ்வொரு வருடமும் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்குகள்

உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அது மாவட்ட நீதிமன்ற வழக்கொன்றில் முறைப்பாட்டாளருக்கு சட்ட ரீதியான வட்டியுடன் ரூபா 10,000,000 வழங்குமாறு அளிக்கப்பட்ட மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் 23089/ஆசு இன் தீர்ப்பை இரத்துச்செய்யுமாறு கோரி கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடாகும்.

மேல் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இரண்டு வழக்குகள் வணிக உயர்நீதிமன்றத்திலும் ஐந்து வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படுகின்றன.

நீதிவான் நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகளும் தொழில் திணைக்கள நடுத்தீர்ப்புக்காக இரண்டு வழக்குகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

குறிப்பு 7

நிதிச்செலவுகள்

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 490,217 | 693,070 | | 693,070 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 5,683,109 | 2,805,348 | (20,000) | 2,825,348 |
| செலாவணி இலாபம் / நட்டம் | 170,572 | 53,463 | | 53,463 |
| கடன் அட்டைத் தரகு | 48,521 | 47,851 | | 47,851 |
| குத்தகை வட்டி | 2,490,894 | 4,232,450 | | 4,232,450 |
| | **8,883,313** | **7,832,182.36** | **(20,000)** | **7,852,182** |

குறிப்பு 8

(i) வருமான வரி

| | 2014 | 2013 |
|---|---|---|
| **கணக்குகளின் பிரகாரம் தேறிய இலாபம் / நட்டம்** | **(50,629,337)** | **(140,508,406)** |
| | | |
| **கூட்டுக : அனுமதிக்க முடியாத செலவினங்கள்** | | |
| **தேய்வு** | 50,005,060 | 66,240,306 |
| **தேய்வு - திருகோணமலை** | 178,531,044 | 178,044,930 |
| **அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு** | 2,541,373 | 416,534 |
| **பணிக்கொடை ஏற்பாடு** | 44,218,603 | 33,506,189 |
| **கேளிக்கை** | 964,269 | 542,868 |
| **பொருளாதார சேவைக் கட்டணம்** | 6,273,298 | 5,839,153 |
| | **282,533,647** | **284,589,980** |
| **கழிக்க : அனுமதிக்க முடியாத செலவினங்கள்** | | |
| **மூலதன செலவினம்** | 125,289,729 | 107,673,562 |
| **குத்தகை** | 15,520,524 | 15,520,524 |
| **பணிக்கொடைக் கொடுப்பனவு** | 10,104,537 | 12,269,407 |
| **அரச மானியம்** | 218,160,000 | 96,020,000 |
| | **369,074,790** | **231,483,493** |
| | | |
| **வரி விதிக்கக்கூடிய இலாபம் / நட்டம்** | (137,170,480) | (87,401,919) |
| **முன் கொண்டுவந்த வரி நட்டம்** | | |
| **முன் கொண்டு சென்ற வரி நட்டம்** | **(137,170,480)** | **(87,401,919)** |
| **வருமான வரி ஏற்பாடு** | | **(692,759)** |

வருமானத்தில் இருந்து கிடைக்கும் இலாபத்தில் 28மூ வரியைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் கடமைப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் சீராக்கம் செய்யப்பட்ட வரி விதிக்கக்கூடிய இலாபத்தின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. பிற்போடப்பட்ட வரி இ.க.நி. 12இன் பிரகாரம் தாமதித்த வரியை கணித்து, பரிசீலித்து அங்கீகரிக்கப்படுகின்றது.

**8 (ii)** பிற்போடப்பட்ட வரி இ.க.நி. 12இன் பிரகாரம் தாமதித்த வரியை கணித்து, பரிசீலித்து அங்கீகரிக்கப்படுகின்றது.

தாமதித்த வரிச் சொத்துகளும் பொறுப்புகளும்

| | 2014 | 2013 |
|---|---|---|
| **நிதி நிலைமை** | | |
| **தாமதித்த வரிப் பொறுப்பகள்** | 85,864,191 | 65,647,681 |
| **தாமதித்த வரிச் சொத்துகள்** | (945,105) | (1,139,358) |
| **தேறிய தாமதித்த வரிச் சொத்துகள்** | **84,919,086** | **64,508,323** |
| **விரிவான வருமானக் கூற்று** | | |
| **தாமதித்த வரிப் பொறுப்புகள்** | 20,216,510 | 19,819,243 |
| **தாமதித்த வரிச் சொத்துகள்** | 194,253 | 179,812 |
| **தேறிய தாமதித்த வருமான வரி வருமானம் / (செலவுகள்)** | **(20,410,763)** | **(19,999,055)** |

குறிப்பு 9

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கொண்டு செல்லும் கணக்கு கிரயத்தில் | 01.01.2014 இல் மீதி ரூபா | கூட்டுதல் மாற்றங் கள் ரூபா | கையுதிர்ப்புகள்/ மாற்றங்கள் ரூபா | 31.12.2014 இல் மீதி ரூபா | **தேய்வுக்கான ஏற்பாடு 2014.01.01 ரூபா** | காலப்பகு திக்கான கட்டணம் பா | கையுதிர்ப்புகள்/ மாற்றங் கள் ரூபா | தேய்வுக்கான ஏற்பாடு 2014.12.31 ரூபா | 2014.12.31இல் இருந்தவாறு **NBW** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காணி | 7,764,234 | | | 7,764,234 | | | | | 7,764,234 |
| கட்டிடம் | 168,153,640 | 139,997 | | 168,293,637 | 111,883,602 | 3,816,972 | | 115,700,574 | 52,593,063 |
| பொறிகள், இயந்திரங்கள் | 593,569,358 | 651,570 | | 594,220,928 | 472,515,724 | 4,770,667 | | 477,286,391 | 116,934,537 |
| சங்கீத உபகரணங்கள் | 6,859,440 | | | 6,859,440 | 6,640,656 | 45,122 | | 6,685,778 | 173,662 |
| மோட்டார் வாகனங்கள் | 16,058,169 | 19,267,570 | | 35,326,129 | } 45,594,186 | 8,234,282 | | 53,828,468 | 15,242,518 |
| நிதிக்குத்தகை, வாகனம் | 52,963,457 | | (19,218,600) | 33,744,857 | } | | | | |
| தளபாடங்கள், பொருத்திகள் | 131,950,959 | 162,756 | (214,075) | 131,899,640 | 103,232,706 | 4,471,960 | | 107,686,827 | 24,212,813 |
| பதிவு நாடாக்கள் | 24,598,606 | 325,948 | | 24,924,554 | 24,548,606 | 100,789 | | 24,649,395 | 275,159 |
| செவிப்புல அலைவரிசை | 878,472,516 | 1,604,972 | | 880,077,488 | 717,716,887 | 8,755,120 | | 726,472,007 | 153,605,481 |
| ஒலிபரப்பு இயந்திரம் | 1,409,956,468 | 654,237 | | 1,410,610,705 | 943,853,539 | 16,927,472 | | 960,781,012 | 449,829,693 |
| கணனி உபகரணங்கள் | 34,527,097 | 529,359 | | 35,056,456 | 27,643,332 | 2,882,656 | 2,236,721 | 32,762,709 | 2,293,747 |
| நூலக புத்தகங்கள் | 445,646 | 2,114 | | 447,760 | | | | | 447,760 |
| சிறிய கருவிகள் | 107,675 | | | 107,675 | 103,551 | 20 | | 103,570 | 4,105 |
| | **3,325,427,266** | **23,338,913** | **(19,432,675)** | **3,329,333,504** | **2,453,732,791** | **50,005,060** | **2,236,721** | **2,505,956,732** | **823,376,772** |

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கொண்டு செல்லும் கணக்கு கிரயத்தில் | 01.01.2014இல் மீதி ரூபா | கூட்டுதல் மாற்றங் கள் ரூபா | கையுதிர்ப்புகள் மாற்றங்கள் ரூபா | 31.12.2014 இல் மீதி ரூபா | **தேய்வுக்கான ஏற்பாடு 2014.01.01 ரூபா** | காலப்பகு திக்கான கட்டணம் ரூபா | கையுதிர்ப்புகள் மாற்றங் கள் ரூபா | தேய்வுக்கான ஏற்பாடு 2014.12.31 ரூபா | 2014.12.31இல் இருந்தவாறு **NBW** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறிகள், இயந்திரங்கள் | 203,231,757 | | | 203,231,757 | 30,484,763 | 15,242,382 | | 45,727,145 | 157,504,611.82 |
| மோட்டார் வாகனங்கள் | 4,344,000 | | | 4,344,000 | 2,172,000 | 1,086,000 | | 3,258,001 | 1,085,999.20 |
| தளபாடங்கள், பொருத்திகள் | 3,228,585 | | | 3,228,585 | 484,288 | 242,144 | | 726,432 | 2,502,153.12 |
| அலுவலக உபகரணங்கள் | 8,848,274 | | | 8,848,274 | 1,769,655 | 884,827 | | 2,654,482 | 6,193,791.60 |
| மின்பிறப்பாக்கிகள் | 234,689,948 | | | 234,689,948 | 35,202,428 | 17,601,746 | | 52,804,174 | 181,885,773.60 |
| செவிப்புல அலைவரிசை | 57,280,268 | | | 57,280,268 | 8,592,040 | 4,296,020 | | 12,888,060 | 44,392,207.60 |
| ஒலிபரப்பு இயந்திரம் | 1,665,970,376 | 9,070,777 | | 1,675,041,153 | 249,517,888 | 125,240,784 | | 374,758,672 | 1,300,282,480.84 |
| கணனி உபகரணங்கள் | 73,612,786 | | | 73,612,786 | 73,612,786 | | | | 73,612,786.00 |
| சிறிய கருவிகள் | 5,266,693 | | | 5,266,693 | 790,004 | 395,002 | | 1,185,006 | 4,081,686.60 |
| கருவிகள் | 180,561,849 | | | 180,561,849 | 26,800,960 | 13,542,139 | | 40,343,099 | 140,218,750.32 |
| | **2,437,034,539** | **9,070,777** | | **2,446,105,313** | **429,426,813** | **50,005,060** | | **534,345,072** | **1,911,760,240.70** |

குறிப்பு 10

விற்பனைக்காக இருப்பவை

| விபரம் | 2014 | 2013 |
|---|---|---|
| லங்கா புவத் நிறுவனத்தில் முதலீடு | 1,000,000 | 1,000,000 |

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை

| விபரம் | **2014** | **2013** | சீராக்கல் | **2013** |
|---|---|---|---|---|
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை | 142,180,474 | 20,884,033 | 100,222 | 20,984,255 |
| | **142,180,474** | **20,884,033** | **100,222** | **20,984,255** |

குறிப்பு 11

வணிக மற்றும் ஏனைய வருமதிகள்

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கடனாளி ஒலிபரப்பு நேரம் | 197,360,736 | 182,178,530 | 1,963,812 | 180,214,718 |
| கழிக்க: நிதிச்சொத்து சேதம் | (100,307,731) | (98,041,358) | | (98,041,358) |
| பணியாளர் கடன் | 6,745,921 | 6,819,205 | | 6,819,205 |
| ஏனைய பணியாளர் முற்பணம் | 9,107,983 | 9,909,801 | | 9,909,801 |
| பணியாளர் கடனாளிகள் ஊ.சே.நி. | 319,973 | 327,195 | | 327,195 |
| முற்பணக் கொடுப்பனவு | | 857,394 | | 857,394 |
| வழங்குனர் முற்பணக் கொடுப்பனவு | 2,793,558 | 2,386,419 | | 2,386,419 |
| நானாவிதக் கடனாளிகள் | 20,073,043 | 5,306,017 | | 5,306,017 |
| மதிக்கப்படாத காசோலைகள் | 3,921,340 | 4,040,514 | (6,400) | 4,046,914 |
| P.M.G நடைமுறைக் க.கு. மரண அறிவித்தல்கள் | 7,997,854 | 7,997,854 | | 7,997,854 |
| லக்ஹண்ட கிளைக் கணக்கு | 12,807,862 | 12,807,862 | | 12,807,862 |
| G.S.T. கட்டுப்பாட்டுக் கணக்கு | 237,267 | 237,267 | | 237,267 |
| கிடைக்கவேண்டிய வருமானம் (ஏனையவை) | 7,862,609 | 33,392,883 | (3,134,230) | 36,527,113 |
| நிறுத்தி வைத்தல் வரி | (133,967) | (133,967) | | (133,967) |
| P.M.G நடைமுறைக் க.கு. உரிமக் கட்டணம் | 195,700 | 195,700 | | 195,700 |
| ஒதுக்குக் கணக்கு | 221,965 | 221,965 | | 221,965 |
| ஒதுக்குக் கணக்கு (சிறாப்பர்) | 281,110 | 281,110 | | 281,110 |
| தாமதித்த வருமானம் | 5,102,000 | 10,204,000 | | 10,204,000 |
| ஏனைய வைப்புகள் | 9,264,962 | 9,664,962 | | 9,664,962 |
| | **183,852,186** | **188,653,353** | **(1,176,818)** | **189,830,171** |

குறிப்பு 12

காசும் காசுக்குச் சமனானவையும்

| விபரம் | **2014** | **2013** |
|---|---|---|
| இலங்கை வங்கி - மாத்தறை | 61,150 | 1,825 |
| மக்கள் வங்கி - சர்வதேசப் பிரிவு | 194,498 | (65,206) |
| இலங்கை வங்கி - ரொறிங்டன் - பிரதான கணக்கு | (48,087,342) | (48,529,414) |
| ஸ்ரேற் பேங் ஒப் இந்தியா | 377,104 | 384,391 |
| இலங்கை வங்கி - அனுராதபுரம் | (16,020) | 17,900 |
| இலங்கை வங்கி - கண்டி | 982,282 | 836,481 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி | 6,840,698 | (303,317) |
| இலங்கை வங்கி - ரொறிங்டன் - வானொலி அனுமதிப்பத்திரக் | 9,415,910 | 303,130 |
| க.கு | 1,626,410 | 706,524 |
| இலங்கை வங்கி - ரொறிங்டன் - எப்.எம். கருத்திட்டம் | 205,530 | 114,287 |
| முற்பணக்காசு முறை | 10,581,799 | 994,212 |
| இலங்கை வங்கி - ரொறிங்டன் - ஒலிநாடா விற்பனை | 980,886 | 549,989 |
| இலங்கை வங்கி - சென்னை | | 25,000 |
| முற்பண சில்லறைக் காசேடு | 11,080,809 | 2,631,599 |
| காசுப் புத்தகம் - திருகோணமலை கருத்திட்டம் | | |
| இலங்கை வங்கி - சேமிப்பு | 85,502 | 82,155 |
| நிலையான வைப்புகள் | 20,133,672 | 59,969,349 |
| செனசும | 322,147 | 322,147 |
| எல்லைக் கணக்கு (மக்கள் வங்கி) | 86,308,377 | 5,204 |
| | **101,096,412** | **18,046,256** |

குறிப்பு 13

நிறுத்திவைத்த வருவாய்

| விபரம் | 2014 | 2013 |
|---|---|---|
| **வருமான ஒதுக்கம் ஜனவரி 01** | (219,291,349) | (75,806,365) |
| **வருமான ஒதுக்க சீராக்கம்** | | 17,138,355 |
| **வருமான ஒதுக்கம்** | **(71,040,100)** | **(161,200,220)** |
| **வருமான ஒதுக்கம் சீராக்கம் 2014** | | 576,881 |
| **வருமான ஒதுக்கம் (சீராக்கம் செய்யப்பட்டது)** | | **(160,623,339)** |
| **மொத்தம்** | **(290,331,449)** | **(219,291,349)** |

குறிப்பு 15

வணிக மற்றும் ஏனைய சென்மதிகள்

| விபரம் | 2014 | 2013 | சீராக்கல் | 2013 அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கடன் கொடுத்தோன் ஒலிபரப்பு நேர விற்பனை | 7,772,612 | 8,828,329 | | 8,828,329 |
| மீளளிக்கக்கூடிய நானாவித வைப்புகள் | 10,002,729 | 9,793,729 | | 9,793,729 |
| திரண்ட செலவினங்கள் | 246,510,016 | 233,486,179 | (21,703,891) | 255,190,070 |
| ஊ.சே.நி. | 3,863,076 | 3,313,155 | | 3,313,155 |
| கோரப்படாத சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 487,477 | 487,477 | | 487,477 |
| நானாவித கடன்கொடுத்தோர் | 20,181,326 | 17,526,848 | 278,658 | 17,248,190 |
| நானாவித கடன்கொடுத்தோர் | 10,000 | 10,000 | | 10,000 |
| பாதுகாப்பு வைப்பு | 895,371 | 356,624 | | 356,624 |
| செனசும - சுனாமி | 322,147 | 322,147 | | 322,147 |
| ஜேர்மன் வானொலி | 16,932,095 | 16,932,095 | | 16,932,095 |
| குத்தகைக் கணக்கு | 8,047,022 | 13,560,440 | | 13,560,440 |
| சிற்றி அன் கில்ட் பரீட்சைக் கட்டணம் | | (295,089) | | (295,089) |
| ரஜரட்டை சுற்றுலா விடுதி | 270,096 | | | |
| | **315,293,967** | **304,321,934** | **(21,425,233)** | **325,747,167** |

குறிப்பு 16

நிதி அல்லாத பொறுப்புகள்

| விபரம் | 2014 | 2013 |
|---|---|---|
| தேசிய பாதுகாப்பு வரி | 15,007,806 | 15,007,806 |
| தேசத்தைப் பாதுகாத்தல் நிதியம் | (12,418) | (12,418) |
| பணம் பெறுநர் வரி | (192,098) | (211,044) |
| நிறுத்திவைத்தல் வரி | (32,861,470) | (32,103,873) |
| சேர் பெறுமதி வரி கட்டுப்பாட்டுக் க.கு | 34,237,030 | 31,219,222 |
| ESC | 58,041,334 | 51,768,036 |
| NBT | 40,402,845 | 30,881,016 |
| தேசிய பாதுகாப்பு நிதியம் | 2,835 | 2,835 |
| வருமான வரி ஏற்பாடு | 692,759 | 692,759 |
| | **115,318,63** | **97,244,339** |

குறிப்பு 14

நிதிக்குத்தகை

| விபரம் | **2014** | **2013** |
|---|---|---|
| நிதிக்குத்தகை (மோட்டார் வாகனம்) | 30,029,135 | 44,746,910 |
| | 30,029,135 | 44,746,910 |
| நிதிக்குத்தகைக் கட்டணம் | (16,266,392) | (14,717,775) |
| | 13,762,743 | 30,029,135 |
| கழிக்க | | |
| குத்தகை வட்டி ஒதுக்குக் கணக்கு | (1,221,490) | (3,712,384) |
| | 12,541,253 | 26,316,751 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 8,047,022 | 13,560,440 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள | 4,494,231 | 12,756,311 |

# 2014 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்/டி/எஸ்எல்பீசீ/1/14/316  ඔබේ අංකය / உமது இல. / Your No. }  දිනය / திகதி / Date } 2015 ஒக்தோபர் 29

தலைவர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

1.2 **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய . பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக

நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவனத்தின் தொடர்ச்சியான உள்ளதன்மை

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை தொடர்ச்சியாக சீர்கெட்டிருந்தது என கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வில் வெளிப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் வங்கி மேலதிகப் பற்று ரூபா 36.7 மில்லியனானதுடன் மீளாய்வாண்டின் போது அவற்றிற்கு செலுத்தப்பட்ட வட்டி ரூபா 5.7 மில்லியனாகும். 2011 இலிருந்து மூலதன செலவினத்திற்காக பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 77.5 மில்லியனில் மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்புபட்ட வங்கி மேலதிகப்பற்று தோன்றுவதற்கு முன்னர் வருமான செலவினங்களில் ரூபா 40 மில்லியன் ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. பொது திறைசேரி கூட்டுத்தாபனத்தில் இருக்கின்ற சாதகமற்ற நிதி நிலைமையை மீளாய்வு செய்து நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது மூலதன மற்றும் வருமான செலவினங்களிற்காக பொது திறைசேரியால் வழங்கப்பட்ட தொகை ரூபா 436 மில்லியனாகும். பொது திறைசேரியின் நிதியேற்பாடுகள் இல்லாமல் கூட்டுத்தாபனத்தின் உள்ளதன்மை தொங்கலில் உள்ளதென அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) மற்றும் இலங்கை அறிக்கையிடல் நியமங்கள் (எல்கேஆர்எஸ்)

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| நியமங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை அறிக்கையிடல் நியமம் 5 | (i) ரூபா 1,000,000 ஆன முதலீடுகள் நீண்ட காலமாக எவ்வித நலனும் பெறாமல் இருந்தமையால் 2012 இல் |

| | | |
|---|---|---|
| | | விற்கவேண்டிய தேவைகள் இனங்காணப்பட்டிருந்தது. ஆனால், இது சந்தைப் பெறுமதியிலோ அல்லது நியாயப் பெறுமதியிலோ, அதனை விற்பதற்கோ அல்லது பெறுமதியிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கழிக்கப் பட்டுள்ளதுடன் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. |
| | | (ii) வருமானம் மற்றும் செலவினம், வரிக்கு முன்னரான இலாபம்/ நட்டம் அலகு மூடப்பட்டு/ இடை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் வெளிபடுத்தப்பட வேண்டியிருந்து. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் ஏப்ரல் 04 இல் மூடப்பட்டிருந்த கொத்மலை ஒலிபரப்பு நிலையம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை அறிக்கையிடல் நியமம் 8 | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருக்கின்ற புறம்பான செயற்திட்டமாக பேணப்பட்ட 06 பிரதேச சேவைகள், 08 ஒலிஅலை வரிசைகள் மற்றும் டெச்செ வெல் றிலே நிலையம் என்பன உள்ளன. எவ்வாறாயினும், அந்த சேவைகள் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் அந்த சேவைகளிலிருந்து அறிக்கையிட வேண்டியமை காரணமாக துண்டுகள் தொடர்பான வருமான மூலங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 1 | மீளாய்வாண்டிற்கு 2000 இலிருந்து நிலையான வைப்புக்களிலிருந்து பெறப்பட்ட வட்டியிலிருந்து வங்கியால் |

கழிக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரி ரூபா 32,862,470 கூட்டு மொத்தமாகும். இது தொடர்புபட்ட அந்த ஆண்டுகளின் இலாபங்களிலிருந்து சீராக்கப்பட வேண்டியிருந்தது. ஆனால், நிதியல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 7 | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்ல் கூற்றின் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் நடைபெறும் மூலதன வேலைகளின் பெறவேண்டிய மீதிகளில் சீராக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், காசுப் பாய்ச்சல் கூற்றின் பெறவேண்டிய மீதிகளின் (கடன்பட்டோர்) பெறவேண்டிய மீதிகளின் முரண் ரூபா 328,367 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 16 | கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களிலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கழிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு முறையே ரூபா 1,661,326 மற்றும் ரூபா 186,396 நடைமுறையல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம்-17 | குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம் அல்லது நியாய பெறுமதி எது குறைந்ததோ அதன் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், நியமத்திற்கு முரணாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,155,753 ஆல் பெறுமதி குறைத்துக் கூறப்பட்டிருந்தது. அதேநேரம் பெறுமானத்தேய்வும் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 18 | நீண்டகால வர்த்தக விளம்பரங்களை ஒலிபரப்புவதற்காக கூட்டுத்தாபனத்தால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் மீளாய்வாண்டின் போது ஒலிபரப்பப்பட்ட வர்த்தக விளம்பரங்களின் கீழ் குறிப்பிடுவதற்கு பதிலாக வருமானமாக பதியப்பட்டதுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட விளம்பரங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் புறம்பாக ஒலிபரப்பப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒலிபரப்பப்படுகின்ற ஒழுங்குகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 19 | ஓய்வூதிய நலன்களின் கொடுப்பனவுகள் தற்போதைய மற்றும் எதிர்கால சேவைக் கிரயங்கள் மற்றும் உண்மையான பெறுமதியில் இலாபம் மற்றும் நட்டங்கள் என்பவற்றின் கணக்கீட்டிற்காக கூட்டுத்தாபனத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 20 | கூட்டுத்தாபனமானது மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களிற்காக ரூபா 436,162,836 தொகையான அரசாங்க மானியங்களை பெற்றிருந்தது. எவ்வாறாயினும், அரசாங்க மானியங்களை கணக்கிடுவதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிலமைகள் அரசாங்க மானியங்கள் தொடர்பில் அமுலாக்கப்பட்டிருக்காததுடன் மூலதன மானியங்களின் திரட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

(ஒ) இலங்கை கணக்கீட்டு நியமம்- 21

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் ஐ.அ.டொலர் 1,040,090 மற்றும் இந்தியன் ரூபா 54,718 தொகையான வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலவிய நாணயமாற்று வீதத்தில் மாற்றப்பட்டிருக்காததுடன் நிதிக் கூற்றுக்களில் ரூபா 139 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. இதன்விளைவால், ரூபா 73 மில்லியன் சாதகமான வெளிநாட்டு நாணயமாற்று வீத நன்மைகளை நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ii) வெளிநாட்டு வியாபார முகவர்கள் ஊடாக நாட்டின் 4 விளம்பரங்களின் ஒலிபரப்பினை கணக்கிடுகின்ற அதேநேரம் 2 வெளிநாட்டு ஒலிபரப்பு சேவையிலிருந்து பெறவேண்டிய வருமானம், அலைவரிசை விற்பனையிலிருந்தான வருமானம் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவிய நாணய மாற்று வீதங்களிற்கு பதிலாக உடன்படிக்கை தொடங்கிய காலத்தில் நிலவிய நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், மீளாய்வாண்டிற்கான அலைவரிசை விற்பனையிலிருந்தான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 952,603 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டு அலைவரிசை விற்பனைப் பெறுமதி ரூபா 197,962,756 ஆகும். எவ்வாறாயினும், அலைவரிசை

விற்பனைக்கும் அவற்றின் பணட் பெறுவனவிற்கும் இடையிலான காலப்பகுதி தொடர்பில் சாதகமான பாதகமான நாணயமாற்ற ஏற்றவிறக்க வீதங்களிற்காக சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஓ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 24 | தொடர்புபட்ட தரப்பினராக குறிப்பிடப்பட்ட அரசாங்க நிறுவனங்களிற்கு செலுத்த வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ஔ) | இலங்கை கணக்கீட்டு நியமம்- 38 | ஒலிபரப்பு சேவைகளிற்கான தானியங்கல் வசதிகளை பெறுவதற்கு முன்னைய ஆண்டின் போது ரூபா 3,400,000 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இது கற்பனைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. பதிலாக, இது கணனி உபபாகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. |

### 2.2.3. கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் அலைவரிசை விற்பனையிலிருந்தான வருமானத்திற்காக கணக்கீட்டு கொள்கையொன்றை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. விற்பனை பட்டியல்களின் விலைகளின் அடிப்படையில் அடையாளம் காண்பதற்குப் பதிலாக, ஒலிபரப்பு பட்டியலில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அலைவரிசை விற்பனைப் பட்டியல் தயாரிப்பு தொடர்பான உள்ளக கட்டுப்பாடு நலிவான நிலையில் இருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், மீளாய்வாண்டிற்காக ரூபா 534,031,687 தொகையான அலைவரிசை விற்பனை வருமானத்தின் உண்மைத்தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) 1980 இல் தொடங்கப்பட்டிருந்த திருகோணமலை றிலே ஒலிபரப்பு நிலையத்தின் சொத்துக்கள் பின்னர் 2012 சனவரி 01 இல் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இலவசக் கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு

கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. பதிலாக, தொடங்கப்பட்ட றிலே ஒலிபரப்பு நிலையம் சார்ந்திருக்கின்ற ஜேர்மனி அரசாங்கத்தால் செய்யப்பட்ட கொள்வனவு நேரத்தில் நிலவிய கிரயம் (ஈயூஆர்ஓ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாணயமாற்று வீதத்திற்குள் மாற்றப்பட்டதுடன் ரூபா 2,430,781,990 ஆன ரூபா பெறுமதி சொத்துக்களின் பெறுமதிக்காக கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2012 இலிருந்து அந்த பெறுமதியில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரையும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுக் கொள்கை 2010 ஆம் ஆண்டிலிருந்து நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் மீதி முறைக்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் ஆரம்ப திரண்ட நட்டம் ரூபா 73,612,786 தொகையான கணிப்பீட்டுத் தவறு மற்றும் கணனி மென்பொருள் பெறுமானத் தேய்வு செய்யாமை காரணமாகவும் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு முறையே ரூபா 338,927,087 மற்றும் ரூபா 20,144,777 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) அலைவரிசை விற்பனை மீதி தொடர்பில் பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி என்பன கடன்பட்டோர் கணக்கில் நீக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்புதல் வரி மற்றும் கடன்பட்டோர் கணக்கு என்பன முறையே ரூபா 24,436,043 ரூபா 2,277,082 மற்றும் ரூபா 26,713,124 ஆல் குறைத்தக் கூறப்பட்டிருந்தது.

(இ) ஒவ்வொரு பிராந்திய சேவைகளிற்காகவும் தலைமை அலுவலகத்தில் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கு மற்றும் ஒவ்வொரு பிராந்திய சேவைகளிற்காகவும் தலைமை அலுவலகத்துடன் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கு இணக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் கணக்குகளில் அவசியமான சீராக்கல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக, மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் நடைமுறைக்கணக்கின் ரூபா 4,845,298 கூட்டு மொத்த தொகையான செலவு மீதி ஆண்டின் இறுதியிலுள்ளவாறாக கடன்கொடுத்தோருக்கு கூட்டப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 2 மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான

பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு முறையே ரூபா 1,691,562 மற்றும் ரூபா 5,106,288 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(உ) பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட இரண்டு வாகனங்கள் ரூபா 4,480,200 செலவழித்து பின்னர் திருத்தம்செய்யப்பட்டிருந்ததுடன் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சொத்துக்கள் அதேநேரம் அந்த மோட்டார் வாகனங்களிற்கு எதிரான கணக்கீடு ரூபா 680,031 ஆல் குறைத்துக்கூறப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டு சார்பில் செலுத்தப்பட்ட ரூபா 510,000 ஆன இறைகள் முறைப்படி சீராக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 16,854,788 தொகையான அடுத்துவரும் ஆண்டிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது றிலே ஒலிபரப்பு நிலையத்தால் நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பிற்காக செலுத்தப்பட்ட ரூபா 5,081,632 ஆன தொகை நிதிக்கூற்றுக்களில் விற்பனை கிரயத்தின் நேரடி செலவினமாக காட்டப்பட்டிருந்தது. பதிலாக, இது நிதிக்கூற்றுக்களில் உபகரணங்கள் மற்றும் பொருத்திகளின் பராமரிப்பு மீதான செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 02 மாதங்களிற்காக ரூபா 1,020,408 ஆன ஒலிபரப்புக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஏ) குத்தகை தவணைப்பணங்களின் பெறுமதி ரூபா 272,170 ஆல் வரிச் செலவினங்களிற்கு மேலாக சீராக்கப்பட்டிருந்த அதேநேரம் மீளாய்வாண்டிற்கான வரிச் செலவினக் கணிப்பீடு மற்றும் தொடக்கத்தில் குத்தகைப் பொறுப்பு என்பன நிதிக்கூற்றுக்களில் ரூபா 802,979 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(ஐ) கடந்த 10 ஆண்டுகளாக செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மதிப்பீட்டு வரி அறிவித்தலின் பிரகாரம் ரூபா 51,368,972 ஆகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 58,041,334 ஆக காட்டப்பட்டிருந்த விளைவால், ரூபா 6,672,362 ஆல் பொறுப்புக்கள் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(ஒ) இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (பொருளிருப்பு) மீதிக்கு செய்யப்பட்ட பல்வேறு சீராக்கலின் பிரகாரம், கணக்கு மீதி ரூபா 3,296,381 ஆக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதி ரூபா 2,129,075 ஆக இருந்தமையால், வித்தியாசம் ரூபா 1,167,306 ஆக அவதானிக்கப்பட்டது.

(ஓ) ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் ஊவா மாகாண சபைக்கும் இடையில் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 3,323,333 ஆக இருந்தது. அதில், ரூபா 2,323,333 ஆன வருமானம் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) திருகோணமலைச் செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 23,394,866 ஆன தொகை ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. ஆனால், அதன் பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 178,531,044 கூட்டுத்தாபனத்தின் செலவினமாக காட்டப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் செலவினம் விற்பனைக் கிரயத்திற்கு கூட்டப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஃ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வெளிவாரி ஒலிபரப்பு நிறுவனங்களின் பங்களிப்புகள் செலவினக் கணக்கு மற்றும் அட்டுறு செலவின கணக்குகளிலுள்ள தவறான பரிமாற்று வீதத்தில் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் 2012, 2013 மற்றும் 2015 ஆண்டுகளிற்கான செலவினம் 2014 ஆண்டிற்கான செலவினமாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செலவினமாக ரூபா 2,079,496 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 1,419,054 ஆல் கணக்கில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த அதேநேரம், திரண்ட இலாபம் மற்றும் அட்டுறு செலவினக் கணக்கு முறையே ரூபா 1,429,902 மற்றும் ரூபா 10,848 ஆல் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) தனியார் நிறுவனங்களிற்கு குத்தகையில் வழங்கப்படுகின்ற இரண்டு கோபுரங்களிற்காக 2013 ஆம் ஆண்டின் சார்பில் மீளாய்வாண்டின் போது மீளளிக்கப்பட்ட ரூபா 2,074,016 ஆன மின்சார செலவினம் தொடர்புபட்ட பெறவேண்டிய கணக்குகளிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக அட்டுறு மின்சார செலவின கணக்கிற்கு செலவுகைக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், அட்டுறு மின்சார செலவினக் கணக்கும் மற்றும் பெறவேண்டிய வருமானக் கணக்கு என்பன அதே தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(கா) முன்னைய ஆண்டு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், திரண்ட இலாபம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான தாக்கம் முறையே ரூபா 3,046,987, ரூபா 35,687,683 மற்றும் ரூபா 5,121,333 ஆகும்.

### 2.2.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்கள் தொடர்பில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 13,875,844 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இருந்தபோதிலும், ரூபா 14,726,349 ஆன இனங்காணப்படாத மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற நிதிக்கூற்றுக்களுடன் சமப்படுத்தப்பட்டிருந்த 4 கணக்கு விடயங்கள் தொடர்பில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.6 விளக்கமளிக்கப்படாத முரண்கள்

06 இருப்பு விடயங்களின் மீதிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் கணிப்பீட்டுச் சபை அறிக்கையில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் இடையில் ரூபா 2,636,228 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.7 தொங்கல் கணக்கு

21 ஆண்டுகளிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட 221,965 ஆன காசுக் குறைவு மற்றும் 2007 இல் கண்டுபிடிக்கப்பட்ட ரூபா 281,110 ஆன காசு மோசடி என்பன தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இது நிதிக்கூற்றுக்களிலுள்ள நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தொங்கல் கணக்கு மீதியாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.8 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளதன்மை, உரிமையாண்மை மற்றும் ஒவ்வொரு விடயங்களிற்கு எதிரே குறிப்பிடப்பட்ட பெறுமதி என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| | விபரங்கள் | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் (சொத்துக்களின் கிரயம் உள்ளடங்கலாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாகனங்கள் மற்றும் 2012, 2013 மற்றும் 2014 இல் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள்) | 3,038,827,778 | படிவம் பொது 287 இல் நிலையான சொத்துக்களின் பதிவேடு மற்றும் படிவம் பொது 288 இல் நிலையான சொத்துக்களின் பேரேடு மற்றும் கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட வருமானம் (திருகோணமலை செயற்திட்டம்) | 23,394,866 | கணிப்பீட்டு விபரங்கள் |
| (இ) | மோட்டார் வாகனங்களின் பெறுமதி | 16,816,920 | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 73,414,986 ஆன நிதிக்கூற்றில் காட்டப்பட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் பிரகாரம் வாகனங்களின் பெறுமதிக்கும் இடையில் வித்தியாசத்தை உறுதிப்படுத்துகின்ற பட்டோலை |
| (ஈ) | மறுக்கப்பட்ட காசோலைகள் | 2,468,535 | மறுக்கப்பட்ட காசோலைப் பதிவேடு/ விரிவான பட்டியல் |
| (உ) | செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 9,259,694 | விரிவான பட்டோலை |
| (ஊ) | கடன்பட்டோர் (இரங்கல் அறிவித்தல்கள்) | 7,997,854 | விரிவான பட்டோலை |
| (எ) | வைப்பு வருமதிகள் | 561,272 | விரிவான பட்டோலை மற்றும் வைப்புக்களின் பதிவெடு |
| (ஏ) | திருகோணமலை றிலே ஒலிபரப்பு நிலையத்திலுள்ள (டொசிவெல) நிலையான சொத்துக்கள் | 2,446,105,313 | கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் |
| (ஐ) | திருகோணமலை றிலே ஒலிபரப்பு நிலையத்திலுள்ள தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | கணக்குகளில் பெறுமதிகள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | திருகோணமலை நிலே ஒலிபரப்பு நிலையத்திலுள்ள பரிமாற்ற மற்றும் அன்டனாவின் உபபாகங்கள் | கணக்குகளில் பெறுமதிகள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | பொருளிப்பு பதிவேடு அல்லது உடமையாக்கல் பதிவேடு மற்றும் கையேற்றப்பட்ட பொருட்களின் பட்டியல் |
| (ஓ) | நடைபெறும் வேலைகளிற்கான கொடுப்பனவுகள் | 130,000,000 | விலைப் பட்டியல், பற்றுச்சீட்டுக்கள், எதிர்பார்த்த வேலைத் திட்டங்கள், கிரயம், மதிப்பீடுகள், கொடுப்பனவு அனுமதிக்கின்ற ஆவணங்கள் |
| (ஔ) | ஊழியருக்கான முற்பணங்கள் | 7,684,737 | விரிவான பட்டோலை மற்றும் இணக்கக் கூற்றுக்கள் |
| (ஃ) | கணக்குகளில் செய்யப்பட்ட சீராக்கல் (நாளேட்டுப் பதிவு 17 சம்பந்தமானது) | 65,486,992 | ஆதாரமான ஆவணங்கள் |
| (க) | கணக்குகளில் செய்யப்பட்ட சீராக்கல் | 124,221 | நாளேட்டு உறுதிச்சீட்டு மற்றும் ஆதாரமான ஆவணங்கள் |
| (கா) | கடன்பட்டோர் | 35,301,041 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் ஆதாரமான ஆணவஙகள் கொண்டிருக்கின்ற கோவை |
| (கி) | வெளிநாட்டு அலைவரிசை விற்பனை | 80,417,505 | விலைப்பட்டியல் |
| (கீ) | 10 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருக்கின்ற வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் (லக்கன்ட கிளை கணக்கு) | 12,807,802 | சம்பந்தப்பட்ட கோவை விபரங்கள் மற்றும் பெறுமதி கணிப்பீடு காணப்படுகின்ற பட்டியல் |
| (கு) | சில்லறைக் கொடுப்பனவு | 294,689,798 | 96 கொடுப்பனவு உறுதிச்சீட்டு மற்றும் ஆதாரமான ஆவணங்கள் |
| (கூ) | அலைவரிசை கடன்பட்டோர் | 29,551,845 | விரிவான பட்டோலை |
| (கெ) | அலைவரிசை கடன்கொடுத்தோர் | 16,717,242 | விரிவான பட்டோலை |

**2.3. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு மற்றும் அலைவரிசை விற்பனையின் கடன்பட்டோர் மீதி ரூபா 201,356,608 மொத்தமாகும் அதில், வெளிநாட்டு கடன்பட்டோர் மீதி ரூபா 66,117,780 மொத்தமாகும். அந்த கடன்பட்டோரில் பத்தொன்பது சதவீதம் 10 ஆண்டுகளை விஞ்சியிருந்தது.

(ஆ) குறுகியகால ஒலிபரப்புகளில் பெறவேண்டிய தொகை நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்த கொள்கைக்கு முரணாக ஒலிபரப்புதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்விளைவால், குறுகியகால நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல் தொடர்பில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 14,570,437 ஆன தொகை பெறவேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தால் அனுமதிக்கப்பட்ட கடன்களிற்கான கால எல்லை 2 மாதங்களாக உள்ள போதிலும் முறையே ரூபா 783,285, ரூபா 5,481,053 மற்றும் ரூபா 532,214 தொகையான மீதிகள் முறையே 10 ஆண்டுகள், 5 முதல் 10 ஆண்டுகள் மற்றும் 1 முதல் 5 ஆண்டுகள் வரையான காலங்களிற்கு இடையில் இருந்தன.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,264,962 தொகையான பெறவேண்டிய வைப்புக்களின் மீதியின் 82 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,628,917 ஆன தொகை 5 ஆண்டுகளிற்கு மேலாக உள்ள தன்மையில் இருக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2007 முதல் 2011 வரையான காலத்திற்காக பெறவேண்டிய ரூபா 3,035,760 கணக்காய்வு கட்டணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 2,793,558 தொகையான முற்பணங்கள் 3 மாதங்களிற்கு மேல் 2 ஆண்டுகள் வரை வழங்குநர்களின் செயற்பாட்டில் உள்ளன.

(ஊ) 2010 முதல் மீளாய்வாண்டு வரையான காலத்திற்காக ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 40,402,845 ஆன தேசத்தை கட்டியெழுப்புதல் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. பதிலாக இது நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ) | நட்டங்கள் அடையாளம் காணப்படுவதற்கும் மற்றும் 2009 திசெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் பொறுப்புடைய தரப்பினர் புலனாய்வுகள் நடாத்தப்பட்டிருக்காததுடன் விபத்திற்கு உட்பட்டமை காரணமாக பயன்படுத்தப் படாதவையாக அகற்றப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் இந்த வாகனத்திற்காக காப்புறுதியிலிருந்து பெறப்பட்ட இழப்பீடு ரூபா 2,779,300 ஆகும். |
| (ii) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 155 | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 13 கணக்காய்வு ஐயவினாக்களிற்காக 2015 யூலை 11 வரையும் பதில்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 மாதங்களிற்கு மேலாக கொடுப்பனவுகளிற்காக சமர்ப்பிக்கப்படாது இருக்கின்ற ரூபா 599,321 தொகையான 97 காசோலைகள் தொடர்பான பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மார்ச் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், |

ரூபா 584,570 தொகையான அந்த காசோலைகளில் 89 இன் நிலைமை சமர்ப்பிக்கப்படாத காசோலையாக இருந்தது.

| | |
|---|---|
| (v) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | ரூபா 22,500 முதல் ரூபா 249,000 வரையான வீச்செல்லை கொண்ட ரூபா 3,246,907 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் போது 60 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 எல்லையை விஞ்சி வழங்கப்பட்டிருந்தது. |
| (vi) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 20 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 706,476 ஆன முற்பணங்களின் தீர்ப்பனவு தொடங்கப்பட்ட வேலைகள் பூர்த்தியாக்கல் 5 மாதங்கள் தாமதத்தின் பின்னர் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. |
| (vii) நிதிப்பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 473,130 ஆன முற்பணம் 2015 மார்ச் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) நிதிப்பிரமாணம் 1645, 1646 | நிறுவனத்தின் தலைவர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய மோட்டார் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (xi) நிதிப்பிரமாணம் 1645(ஆ) | 2006 இன் பின்னர் படிவம் பொது 267 இல் சம்பவ குறிப்பு புத்தகம் நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (x) நிதிப்பிரமாணம் 1647(இ) | மோட்டார் வாகனங்களிற்கான திருத்தங்களின் போது அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் தொடர்பான அறிக்கை பேணப்பட்டிருக்காததுடன் களஞ்சியங்களிற்கு |

| | |
|---|---|
| | அவற்றினை திரும்ப ஒப்படைப்பதற்கு முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தி | மாதாந்த காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் திரவத்தன்மை மற்றும் கடன் பெறல் தொடர்பான அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனம் அதற்கான கவனத்தினை பணிப்பாளர் சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 139,931,525 ஆன நேரொத்த வரிக்கு முந்திய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 50,629,337 ஆன வரிக்கு முந்திய நட்டத்தை விளைந்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 89,302,188 ஆன தொகையால் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா 240,041,678 தொகையான அரசாங்க மானியங்களிலிருந்து பெறப்பட்ட சொத்துக்களின் காலக்கழிவு, ரூபா 218,160,000 தொகையான மீண்டெழும் செலவினங்களிற்கான அரசாங்க பங்களிப்பு, ரூபா 458,201,678 மொத்தமான வருமானமாக பதியப்பட்டவை என்பன இந்த தொகையால் மீளாய்வாண்டிற்கான நட்டங்களை குறைப்பதற்கு பிரதான பங்காற்றியிருந்தது.

### 3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முக்கியமான விகிதப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| | விகிதம் | 2014 | 2015 |
|---|---|---|---|
| | <u>திரவத்தன்மை</u> | | |
| (i) | நடைமுறை | 0.74:1 | 0.61:1 |
| (ii) | விரைவு | 0.66:1 | 0.51:1 |
| | இலாபத் தன்மை | | |
| (i) | மொத்த இலாபம் (சதவீதத்தில்) | 26.92 | 30.78 |
| (ii) | தேறிய இலாபம் (சதவீதத்தில்) | (9.41) | (27.02) |

(ஆ) மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 31 முதல் 27 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது, அது 4 சதவீதம் மற்றும் தேறிய நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 18 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது வங்கி மேலதிக பற்று வட்டியாக ரூபா 5,683,109 ஆன கொடுப்பனவின் விளைவால் மீளாய்வாண்டின் போது வங்கி கணக்கினைப் பேணுவதில் வங்கி மேலதிகபற்றின் அதிகரிப்பு தொடர்ந்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 103 சதவீதத்தால் அதிகரிப்பொன்றைக் காட்டியதென அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேலே காட்டப்பட்ட நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் கடன்களை அறவிடுவதிலுள்ள வினைத்திறனின்மை காரணமாகவும் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 184 மில்லியன் தொகையான குறைவான திரவச் சொத்துக்கள் காரணமாகவும் மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

**3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிரான அல்லது கூட்டுத்தாபனத்தால் தொடரப்பட்ட சட்ட விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனமானது மீளாய்வாய்டின் போது இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான கிறிக்கெற் போட்டியினை ஒலிபரப்புகின்ற உரிமைகளை முறைபடி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கிறிக்கெற் போட்டி ஒலிபரப்புகின்ற போது வர்த்தக விளம்பரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. இதன்விளைவால், முறையான ஒலிபரப்பு உரிமையை பெற்றிருந்த நிறுவனம் ரூபா 50 மில்லியன் தொகையான இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்திருந்தது. இது தொடர்பில் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா 872,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவர் கூட்டுத்தாபனத்தின் மோட்டார் வாகனத்தில் பயணம் செய்தபோது அடைந்த சேதங்களிற்காக ரூபா 8 மில்லியன் இழப்பீடு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

(இ) சந்தைப்படுத்தல் நிறைவேற்று உத்தியோகத்தர் ரூபா 13.21 மில்லியன் மோசடி செய்திருந்ததுடன் பதிவேடுகள் மற்றும் கணக்கு புத்தகங்கள் முறைப்படி பேணப்படாமை காரணமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ரூபா 5.65

மில்லியன் மாத்திரம் கோருவதற்கு வழக்கு தொடுத்திருந்தது. பின்னர் கூட்டுத்தாபனம் மிகுதி ரூபா 7.56 மில்லியனை அறவிடுவதற்கு கொழும்பு வர்த்தக உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயலாற்றலை அளவிடுவதற்கு செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இதன்விளைவால், கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) நல்ல ஆளுகை தொடர்பான 2003 யூன் 02 ஆந்திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், பணிப்பாளர் சபை கூட்டிணைந்த திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றலை காலரீதியாக புலனாய்வு செய்யப்பட வேண்டியதுன் திட்டமிட்ட செயலாற்றலில் இருந்து உள்ளபடியான செயலாற்றல் வேறுபடுகின்றதா என கண்டுபிடிக்க வேண்டியதுடன் இதன்படி கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீடு திருத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 முதல் மீளாய்வாண்டின் பெப்ரவரி வரையான காலத்திற்காக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான விடுமுறை விடுதியிலிருந்து பெறவேண்டிய ரூபா 7,210,000 ஆன குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குத்தகைக்கு எதிராக ஆதனங்களின் உரிமையாண்மையை பெறுவதற்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,151,206 தொகையான சட்டக் கட்டணம் செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 யூன் 30 வரை சட்டக் கட்டணங்களை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் வானொலி அலைவரிசையின் தானியங்கல் நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டிருந்ததுடன் 2012 மே 14 அளவில் ரூபா 3,400,000 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இந்த வேலை 2015

யூலை வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனம் இந்த நடைமுறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை அடைய முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு வழிகாட்டல்களிற்கு முரணாக ஒன்லைன் கொள்வனவு முறைமை ஊடாக 14 சந்தர்ப்பங்களில் அவசர கொள்வனவுகளாக ரூபா 13,951,244 பெறுமதியான கொள்வனவுகள் செய்யப்பட்டிருந்தது. 02 முதல் 09 மாதங்கள் வரையான காலப்பகுதி விடயங்களை பெறுவதற்கு எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதில், 3 கொள்வனவுகள் ஒவ்வொன்றும் 2 மில்லியன் ரூபா 6,860,574 மொத்தமான கொள்வனவை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஒவ்வொன்றும் 1 மில்லியனை விஞ்சிய கொள்வனவை ரூபா 3,943,046 மொத்தமான 3 கொள்வனவுகள் பிரதிநிதித்துவபபடுத்தியது. வேண்டப்பட்ட குறிப்புரைகளில் உள்ள கூட்டுத்தாபனத்தில் பொருட்கள் பெறப்பட்டது என காட்டுவதற்கான சான்றிதழ் பெறபட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 860,000 செலுத்தி கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வீடுகளின் உடமையாக்கல் கட்டளைகளை பெறுவதற்கும் முறையாக உரிமையாண்மையை உறுதிப்படுத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தின் 22 உத்தியோகபூர்வ விடுதிகளில், 3 விடுதிகள் இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டதுடன் ஏனைய 2 விடுதிகள் கூட்டுத்தாபனத்தில் ஊழியரல்லாத நபர்களால் பயன்படுத்தப்படுகின்றது. அநுராதபுரம் நகர எல்லையில் பணிப்பாளருடைய விடுதி பாதுகாப்பில்லாததால் பயன்படுத்தப்பட்டிருக்காதவையாக இருப்பதால் இடிதகர்த்தப்பட்டிருந்தது. ஆகவே, அதிகமான வீடுகள் பாதுகாப்பில்லாமல் பயன்படுத்தப்படாதிருந்தது. அதிலிருந்து ஒரு பகுதி உத்தியோகத்தர்களிற்கு இடையிலான உத்தியோகபூர்வ வதிவிட ஒதுக்கீடு முறையான வழியில் செய்யப்பட்டிருக்கவில்லை.

தற்போது அந்த விடுதியில் வசிக்கும் உத்தியோகத்தர்களை உறுதிப்படுத்துவதற்கும், எப்படி அந்த விடுதிகள் அவர்களிற்கு ஒதுக்கப்பட்டது என்பதும் வாடகை சாட்டுதல் செய்யப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2 முதல் 10 ஆண்டு காலமாக இருக்கின்ற ரூபா 135,375,722 ஆன அட்டுறு செலவினம் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் அட்டுறு செலவினங்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், பொறுப்புக் காலத்தை விஞ்சியிருந்த

பொறுப்பற்ற செலவினத்தினை அல்லது உள்ளபடியான பொறுப்பற்ற செலவினத்தினை பகுப்பாய்வு செய்வதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அலைவரிசை கடன்கொடுத்தோரின் பட்டோலையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளருக்கு ரூபா 1,269,922 ஆன தொகை செலுத்த வேண்டியிருந்த அதேநேரம் சந்தைப்படுத்தல் பிரிவு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 136,969 ஆக இருந்தது என குறிப்பிட்டு கடிதமொன்றை எழுதியிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது 3 உடன்படிக்கைகள் தொடர்பில் வர்த்தகப் பிரிவால் விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. இது ஒலிபரப்பு பட்டியலின் அடிப்படையில் கணக்கீட்டு பிரிவால் ''விற்பனை இல்லை'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புத்தூரில் அன்டனா கோபுரம் பொருத்துவதற்கான செயற்திட்டம் கைவிடப்பட்டமை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9.2 மில்லியன் நட்டத்தை அடைந்திருந்தது. ஒப்பந்தத்திற்கான கைப்பணிகள் சபை நிர்மாண நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு இயலாதிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட முற்பணங்களுடன் சேர்த்து சம்பந்தப்பட்ட சபைக்கு இரும்பிற்காக ரூபா 5,024,998 ஆன தவறான கொடுப்பனவை செய்தல் இதற்கு பங்களித்திருந்தது. சம்பந்தப்பட்ட சபையின் தலைவர் 2014 யூலை 16 இல் ரூபா 4,348,041 ஆன முழு நட்டத்தினையும் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்ததுடன் 2015 செப்தெம்பர் அளவில் இது திரும்ப செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், இருக்கின்ற நட்டங்களை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கை கைசாத்திடும் போது நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கான இயலுமை மற்றும் கைப்பணி சபையின் சார்பில் கையொப்பமிட்ட வெளிநபர் ஒருவரின் மோசடியான செயற்பாடு என்பன தொடர்பில் தீங்கான தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொலிஸ் வானொலி அன்டனா கூட்டுத்தாபனத்தின் பரிமாற்ற கோபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது 24 மணித்தியாலமும் செயற்படுத்தப்பட்டிருந்தது. தேவைப்பட்ட மின்சாரம் கூட்டுத்தாபனத்தின் மின்னியல் விடுதி ஊடாக வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேல், இந்த அன்டனா நுகர்ந்த மின்சார அலகுகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கும் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பரிமாற்ற கோபுரத்தின் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம், ஒவ்வொன்றிற்கும் ரூபா 100,000 வீத்தில் 16 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 1,600,000 தொகையான பிணை வைப்பு சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்த வைப்புக்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்த வேண்டியமைக்காக தொழிலாளர் திணைக்களத்தால் செய்யப்பட்ட கட்டளையில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,218,609 தொகையான மிகைக் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) பொருளாதார சேவைகள் கட்டணம் உரிய திகதிகளில் திருத்தப்பட்டிருக்காததுடன் அத்தகையவாறு ரூபா 11,979,867 தொகையான மிகைக் கட்டணங்கள் 2004/2005 முதல் 2013/2014 வரையான மதிப்பீட்டு ஆண்டிலிருந்து வரி நிலுவைகள் மீது விதிக்கப்பட்டிருந்தது. இந்த மிகைக் கட்டணம் 2015 மே 31 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிவாரி பிரச்சார பிரிவின் 2011 ஆண்டு நடாத்தப்பட்ட கணிப்பீட்டுச் சபையின் பிரகாரம், 77 சேதமடைந்த, 2 சேதமடைந்தவற்றில் காணமல் பேணவை மற்றும் என்பவற்றின் பெறுமதியை இனங்கண்டு புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணங்கள் 101 மற்றும் 113 இன் பிரகாரம் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுடன் சேர்த்த வீரகெட்டிய பரமாற்ற நிலையத்தின் 30 ஏக்கர மற்றும் மஹாவ பரிமாற்ற நிலையத்தின் 68 ஏக்கர் காணி அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த காணிகளின் சந்தைப் பெறுமதியில் இழப்பீட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வீரகெட்டிய பரிமாற்ற நிலையத்தின் முப்பது ஏக்கர் காணி சகர பல்கலைக்கழகம் மற்றும் இளைஞர் படை நிகழ்ச்சித்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட அந்த காணி மற்றும் கட்டிடங்களின் தற்போதைய பெறுமதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

ரூபா 15 மில்லியன் ஆரம்ப தொகையை செலுத்தி குத்தகை அடிப்படையில் றிலே ஒலிபரப்பு நிலையங்களிற்காக நிகழ்ச்சிகளின் இணைப்பு 2012 இல் தனியார் நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப உதவி பெறப்பட்டிருந்ததுடன் அமைச்சின் அறிவுறுத்தல்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமல் மாதாந்த வாடகை ரூபா 400,000 இல் செயற்படுகின்றது. குத்தகை தொகை மீளாய்வாண்டின் போது ரூபா 510,204 இற்கு அதிகரித்திருந்தது. அலையொலிவரிசை பழுதடைந்தமையால் வழங்கப்பட்ட சேவைகள் வினைத்திறனுடையதாக இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், முகாமைத்துவம் ரூபா 45,175,730 பெறுமதியில் 2000 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்ட நுண்பாக முறையை திருத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் 2015 யூன் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் முறைப்படி செயற்படுத்தப்பட்டிருக்காத அல்லது பொருத்தமான முறைமையை கொள்வனவு செய்வேண்டும் என செல்லப்பட்டது.

### 4.6 முறைப்படி சுவீகர்க்கப்பட்டிருக்காத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்கள் தொடங்குதல்

கூட்டுத்தாபனமானது 1979 ஆம் ஆண்டில் ரூபா 250,000 தொகைக்காக நுவரெலியாவின் கவா எலியாவின் கிராம சேவகர் பிரிவில் அமைந்திருந்த 20 பேர்ச் 1 றூட் காணியில் அமைந்திருந்த விடுமுறை விடுதிக் கட்டிடத்தின் உரிமையாண்மை மாத்திரம் கொள்வனவு செய்திருந்தது. நுவரெலியா அரசாங்க அதிபர் மற்றும் பிரதி காணி ஆணையாளரின் 1987 சனவரி ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், 1985, 1986 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளிற்காக ஆண்டு ஒன்றிற்கு ரூபா 6000 செலுத்துவதற்கும் காணிகளின் குத்தகை உரிமையாண்மையை பெறுவதற்கும் அறிவித்திருந்தார். ஆனால், காணியின் குத்தகை உரிமை 2015 யூன் 30 வரை பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.7 வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எக்கல பரிமாற்று நிலையம் அமைந்திருந்த கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமில்லாத இயந்திரங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 12 ஏக்கர் காணியில் அமைந்திருந்தது. அதில் ஒரு பகுதி கூட்டுத்தாபனத்தின் தண்ணீர் மற்றும் மின்சாரம் வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பயன்படுத்தும் வெளித்தரப்பினர் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் அவர்களால் பயன்படுத்திய தண்ணீர் மற்றும் மின்சாரத்தின்

பெறுமதியை கணிப்பீவதற்கும் தொடர்புபட்ட தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனம் 2014 சனவரி முதல் 2014 ஏப்ரல் வரை சலசினி நிறுவனத்தினை பராமரிப்பதற்காக தேவையான கட்டிட வசதிகளை வழங்கியிருந்தது. இது தொடர்பான உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருக்கவில்லை. 2014 சனவரி முதல் 2014 ஏப்ரல் வரை கட்டிடத்தின் வாடகை அறவிடப்பட்டிருக்காத அதேநேரம் வழங்கப்பட்ட தண்ணீருக்காக அறவீடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.8 ஆளணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவம் சேவைகள் திணைக்களததின் சுற்றறிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதிவியுயுர்வுத் திட்டம் தயாரிப்பதற்கு அங்கீகாரத்திற்காக அமைச்சருக்கு முன்வைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் 2015 யூன் 30 வரையும் அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்காமல் ஆட்சேர்க்க முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. அவற்றில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நெறிப்படுத்தலை உதாசினம் செய்தும் அனுமதி பெற்றுக்கொள்ளாமலும் 160 நிரந்தர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான 90 ஊழியர்கள் என்போர் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) ஆட்சேர்ப்புத் திட்டத்தைப் பின்பற்றி விண்ணப்பங்களைக் கோரிய பின்னர் 2014 யூலை 01 இலிருந்து பணிப்பாளர் (சங்கீதம்) ஆக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் பணிப்பாளர் பதவியல்லாதிருந்த இறுவெட்டு விற்பனைகளை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் (சங்கீதம்) பதவிக்காக விண்ணபத்தை சமர்ப்பித்திருக்காத உத்தியோகத்தரை 2009 ஆம் ஆண்டிலிருந்து அப்பதவியில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தது. இது 2015 யூலை வரையும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 886 நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான 3 உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் கூலிகள் ரூபா 383,304,981 ஆன அதேநேரம் துணைநிலை உத்தியோகத்தர்களிற்கு

செலுத்தப்பட்ட தொகை ரூபா 33,771,360 ஆகும். நிரந்தர உத்தியோகத்தரில் மிகை இருப்பினும் நிவாரண உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஒப்பந்த அடிப்படை உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவைகளைப் பெறுதல் சிக்கல் நிலையாக உள்ளது.

(உ) பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) என்ற பெயருடைய மூன்று பிரதான நிறைவேற்றுப் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்தது. 2012 யூலை 06 முதல் 2014 திசெம்பர் 31 வரை பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஊ) ஒப்படை அடிப்படையில் சேர்க்கப்பட்ட பதினைந்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலொசனையாளர் ஒருவரின் சேவைக் காலம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் மீளாய்வாண்டின் போது நீடிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய செயலாற்றலை பரீட்சிக்காமல் அவர்களிற்கு ரூபா 4,685,000 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும், ஆலோசனையாளரின் சேவைககாலத்தை நீடிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் உத்தியோகத்தர்களிற்கான கடமை ஒதுக்கீட்டு கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடமை ஒதுக்கீடு முறைப்படி செய்யப்பட்டிருக்கவில்லை என தனிப்பட்ட கோவைகளை பரீட்சிக்கையில் வெளிப்பட்டது.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவமைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட் வேண்டும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2015 மே 08 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் படி 2012 – 2016 வரையான காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பிஈடி/47 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பாதீடு பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு முன்வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் இது வேண்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 5 பிரிவுகள் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சில நடவடிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்ட பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 5 பிரிவுகளில் 3 பிரிவுகளின் கீழான 41 நடவடிக்கைகளில் ஏழு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 இல் 20, 2012 இல் 25, 2013 இல் 30 மற்றும் மீளாய்வாண்டின் போது 25 உள்ளடங்கலாக நூற்று கணக்காய்வு ஐயவினாக்கள் உள்ளக கணக்காய்வு பிரிவால் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவம் 2015 யூன் 30 வரையும் அந்த வினாக்களில் 20 இற்காக பதில்கள் சமர்ப்பித்திருந்தது.

(ஆ) அனுமதிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், உள்ளக கணக்காய்வு பிரிவில் 4 கணக்காய்வு உதவியாளர் பதவிகள் உள்ளன. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 உதவி கணக்காய்வாளர்கள் மாத்திரம் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

## 5.5 கணக்காய்வு குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், குழுவானது பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் குறைந்தது 3 நிறைவேற்றுத்தரமல்லாதோரைக் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அந்த வேண்டுகையை நிராகரித்து ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பங்குபற்றியிருந்தார்.

## 5.6 வருடாந்த அறிக்கைகளை முன்வைத்தல்

2012 இன் வருடாந்த அறிக்கை 2015 யூன் 30 வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 60 மீற்றர்கள் மற்றும் 100 மீற்றர்கள் உயரத்திலுள்ள 2 அன்டனா கோபுரங்கள் இறக்குமதி செய்வதற்காக 1996 இல் ரூபா 23,119,683 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் கோபுரங்களை பொருத்துவதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு முற்பணமான ரூபா 2,568,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. பொருத்துவதற்கான இடம் தீர்மானிக்கப்பட்டிருக்காமையால் கோபுரங்கள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2010 வரையும் முழுப் பெறுமதியும் நடைபெறும் வேலையாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் பின்னர் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கணக்காய்வு அடுக்கு கணக்கின் கீழ் தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதுவும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 32 ஒப்பந்தங்களை மேற்கொண்ட விற்பனை நிறைவேற்றாளர் ரூபா 356,853 ஆன தொகை மோசடி செய்திருந்தார் என கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 945,000 ஆன தொகை மாத்திரமே அறவிடுவதற்கு பொலிஸ் நட்வடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி தொகையை

அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2014 யூலை 24 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.8 சுற்றாடல் வெளிப்பாடுகளும் சமூக பொறுப்புகளும்

பரிமாற்ற தரத்தினைக் கூறுகின்ற முறைப்பாடுகளை ஏற்பதற்கான பிரிவு கூட்டுத்தாபனத்தில் தாபிக்கப்பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவும் கேட்போரிடமிருந்த பெறப்பட்ட முறைப்பாடுகளை பதிவுசெய்திருக்கவில்லை. பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு ஒலிப்பதிவு பிரிவிற்கு முறைப்பாடுகளை தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய நடைமுறை எதுவும் இருக்கவில்லை. எனவே, கூட்டுத்தாபனமானது நிலவுகின்ற நிலைமை காரணமாக உரியகாலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக் கட்டுப்பாடுகள்
(ஆ) அலைவரிசையிலிருந்தான வருமானம்
(இ) கடன்பட்டோர்
(ஈ) பதவியணியினர் கட்டுப்பாடு
(உ) முகாமைத்துவ தகவல்
(ஊ) வர்த்தக விளம்பர முகவர்களிடமிருந்தான வருமானம் மீதான கட்டுப்பாடு
(எ) கொள்வனவு
(ஏ) பாதீடு
(ஐ) செயற்திட்ட நிறைவேற்றல்
(ஒ) முற்பணக் கொடுப்பனவு

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2014 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள்

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2014 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் வருடத்துக்கான நிதி அறிக்கை தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உங்களது ரீஎம்டீ/எஸ்எல்பீசீ/01/14/316ஆம் இலக்க மற்றும் 2015 ஜுலை 15ஆம் திகதிய 14 (2) சீ வரைபு அறிக்கை தொடர்பானது.

அறிக்கையில் 1.2, 1.3 ஆம் வாசகங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் உடன்படுகின்றேன்.

**2.2. நிதி அறிக்கை தொடர்பான கருத்துரை**

**2.2.1. நிறுவனத்தின் தொடர்ச்சியான இருக்கை**

இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சரியான மேலதிகப்பற்று 36.7 மில்லியனும் 5689109.00 ரூபா வட்டியுமாகும். இந்த வருடத்திற்காகக் கிடைத்திருந்த மூலதன மற்றும் அறவீட்டுச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ள 2 426 477 649 ரூபா பிழையானது. கிடைத்துள்ள தொகை 436162000 ரூபா ஆகும்.

அனைத்து அரச நிறுவனங்களும் திறைசேரி மானியங்களினால் கொண்டுநடாத்தப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தின் இருப்பு தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்றது என்னும் கருத்துடன் நான் உடன்படவில்லை.

**2.2.2. இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

அ. ***நியமம் இல. 5***

i. முதலீடாக வரவழைத்துள்ள 1000000 ரூபா இலங்கை பத்திரிகை நிறுவனத்தில் முதலீடு செய்தது அந்நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் ஆகும். இன்னும் இது விற்பனை செய்வதற்கோ சந்தைப் பெறுமானத்தைக் கணக்கீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல் நடைபெறாத நிறுவனமாகும். எனவே, அமைச்சை விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ii. விற்கப்பட்டுள்ள இவ்வாதனங்கள் மிகவும் பழையவை என்பதனால், செலவினப் பெறுமானம் மற்றும் கிரயத்தைக் கணக்கீடு செய்வதற்கான ஆவணங்கள் இல்லாததால் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ. நியம இல.7 - வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

***இ. நியம இல.8***

i. இலங்கை கணக்கீட்டு நியம இல.8இன் பிரகாரம் பூகோள மற்றும் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்டு வரும் நிறுவனங்களின் கிளைகளின் வருமானம் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் வருமான மூலங்கள் நிதிக்கூற்றுகளினால் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இருப்பினும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய சேவைகள் முழு இலங்கையையும் உள்ளடக்கக்கூடியவாறு தெளிவாகக் கேட்கக்கூடியவாறான ஒலிபரப்பு நிலையங்களாக நடாத்தப்படுகின்றன. இவை வேறான கணக்கீட்டு அலகுகள் அல்ல. எனவே, இப்பந்தியுடன் உடன்பட முடியாது. திருகோணமலை, டொவிஸ்ஸவில ஒலிபரப்பு நிலையம், ஜேர்மன் அரசாங்கத்தின் கீழ் வேறான ஒரு நிறுவனமாக நடத்தப்பட்டு, கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைக்கப்பட்டதனால், வேறான ஓர் அலகாகக் கருதி வருமானங்கள், செலவினங்கள் வேறாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

ii. கொத்மலையை வேறொரு அலகாகக் கருதி இலாப நட்டக் கணக்கீடு செய்யப்படவில்லை என்பதால் அவ்வாறு எடுத்துக்காட்டுவதற்கான தேவைப்பாடு இல்லாதிருந்ததுடன் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் உடன்பட முடியாது.

ஈ. நியம இலக்கம் 01

i. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புடன் உடன்படுகின்றேன். அந்தந்த வருடங்களில் கூட்டுத்தாபனம் எதிர்நோக்கிய நிதி அசௌகரியங்கள் காரணமாக செலுத்தல்

தாமதமான இவ்வாறான நிதிக்காலத்தைத் தாண்டியவுடன் புத்தகங்களில் எழுதி கணக்காய்வினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு புத்தகங்கள் எழுதி வைப்பதற்கு முடியாது. அடுத்த வருடங்களில் இதை செலுத்தவேண்டி ஏற்படலாம்.

ii. தடுத்து வைக்கப்பட்ட வரியாக குறைக்கப்பட்ட தொகையில் கிடைக்க வேண்டிய தொகையாக இருப்பதனால் நிதி அல்லாத பொறுப்புகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. அவ்வருடங்களில் வருமானம் செலுத்த வேண்டி வந்திருப்பின் இத்தொகை செலுத்தப்பட்ட வருமான வரியாக குறைத்துக்கொள்வதைத் தவிர நிதியாக மீண்டும் கிடைக்கப்பெறமாட்டாது. ஆகவே, கணக்குகளில் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதனால், தவறு ஏற்பட்டுள்ளதாக புலப்படவில்லை. இது நிதி சாராத பொறுப்புகளின் கீழ் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

உ. *நியம இல.5*
விற்பனை செய்யப்பட்டுள்ள ஆதனங்கள் மிகப்பழைமையானவை என்பதுடன் வெவ்வேறாக இனம் காண முடியாத இரும்புத் துண்டுகளும் மரத்தளபாட பகுதிகள் என்பதால், செலவினப் பெறுமானம் மற்றும் தேய்வை கணக்கீடு செய்வதற்கு சிரமம் என்பதால், வேறாக எடுத்துக்காட்ட முடியாமல் போனது. இவ்விடயங்கள் 2013ஆம் ஆண்டிலும் தெளிவுபடுத்தப்பட்டன.

***ஊ. நியம இல.7***
முன்னைய வருடங்களில் செயற்பட்ட பல சீராக்கங்களின் விளைவாக இந்த வித்தியாசம் காணப்படுகின்றது. ஏற்றுக்கொள்கின்றேன்.

எ. *நியம இல.12*
நியமத்தினால் தெளிவுபடுத்தப்பட்டுள்ள பந்தியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் விடயம் தெளிவில்லை. எனவே திட்டவட்டமான பதிலைத் தருவது கடினமானது.

ஏ. *நியம இல. 17*
குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களின் பெறுமானம் செலவினப் பெறுமானம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி அடங்கலான பெறுமானத்தின் படி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. நியாயமான பெறுமானமாகக் கணக்கீடு செய்து காட்டப்பட்டுள்ள 55119210.00 ரூபா பிழையானது. எனவே இந்தப் பந்தியுடன் உடன்பட முடியாது.

ஐ. *நியம இல.18*

i. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு நேர வருமானம் கணக்கீடு செய்யப்படுவது பிரசார அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாகும். விற்பனைப் பிரிவினால் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையின் பிரகாரம் வர்த்தக விளம்பங்கள் பிரசாரம் செய்யப்படுவதுடன் அவை பிரசாரம் செய்யப்பட்ட பின் அறிவிப்பாளரின் அட்டவணையின் பிரகாரம் ஒலிபரப்பு நேர வருமானத்தை இனம் கண்டு கணக்கீடு செய்யப்படும். கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள, அளவுகோல்களைப் பொருட்படுத்தாது ஒலிபரப்பு நேர வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது, என்னும் கருத்துடன் உடன்படி முடியாது. 2013ஆம் ஆண்டிலும் இது தொடர்பான தெளிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ii. பந்தியின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நீண்டகால வர்த்தக விளம்பர பிரசாரத்திற்காக ஏற்படுத்தப்படும் உடன்படிக்கைகளின்படி ஒரு வருடத்துக்கு அறவிட வேண்டிய நிதித்தொகை அட்டவணையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படும். எதிர்காலத்தில் பிரசாரம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வர்த்தக விளம்பரங்களினால் கிடைக்கவேண்டிய வருமானத்தை இனம்கண்டு கிடைக்க வேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துவது பயனுள்ள ஒரு வேலைத்திட்டம் அல்ல. எனவே, இப்பந்தியுடன் உடன்பட முடியாது.

ஒ. *நியம இல. 19*
நிதி அறிக்கையில் 3.2.1 (V) பந்தியின் கீழ் குறிப்புகளின் மூலம் இதுபற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஓ. *நியம இல.20*

மீளாய்வாண்டில் மூலதனம் மற்றும் அறவீட்டுச் செலவினங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள 2426472649 ரூபா என்பது பிழையானதாகும். கிடைக்கப்பெற்றுள்ள அரச அளிப்பு 436162000.00 ரூபா ஆகும். தேய்வுக்காக அட்டவணை இறுதிக் கணக்குகளுடன் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஔ. *நியம இல.21*

வெளிநாட்டுக் கடனாக கிடைக்கவேண்டிய 1040089.87 ஐ.அ.டொலர் என்பது பிழையாகும். இந்திய ரூபாய்களில் உள்ள 547717.99 கடன் மீதியும் டொலர் பெறுமானங்களும் சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2013 வரையிலான கடன் பெறுமானம் அந்தந்த ஆண்டுகளில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வீதத்துக்கு ஏற்றவாறு கணிப்பீடு செய்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன் இவற்றில் பெரும்பாலானவை அறவிட முடியாத கடன் என குறிப்பிட விரும்புகின்றேன். முன்மொழியப்பட்டுள்ளவாறு, கிடைக்காத கடனை தற்போதுள்ள பெறுமானத்துடன் கணிப்பீடு செய்வதனால் பாரிய வரித்தொகை ஒன்றும் செலுத்த வேண்டி ஏற்படும். இவ்விடயம் 2013ஆம் ஆண்டிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, இப்பந்தியுடன் ஒருபோதும் உடன்படி முடியாது. இவ்வாறு அறவிடப்படாத கடனை தற்போதைய பெறுமானத்தில் கணிப்பீடு செய்வதனால் பெருந்தொகையான வரி செலுத்த வேண்டி ஏற்படுகின்றது.

க. *நியம இல.24*

i. அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது தற்போதைய பணிப்பாளர் சபை என்பதை ஏற்றுக்கொள்வதுடன் 2014ஆம் ஆண்டு விலகிச் சென்ற பணிப்பாளர் சபையின் தகவல்களை வருடாந்த அறிக்கையில் உட்படுத்துகிறேன். விலகிச்சென்ற பணிப்பாளர் சபையினரின் பெயர்களுடன் நிதி அறிக்கையின் 6ஆம் பந்தியைத் திருத்தி இத்துடன் முன்வைக்கின்றேன். (இணைப்பு 1)

ii. அரச நிறுவனங்கள் தொடர்பான கடப்பாடுகள் நிதிக்கூற்றுகளில் வெளிப்பத்தப்பட்டுள்ளன.

ங. ***நியம இல.38***

தன்னியக்க வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு பெறப்பட்டுள்ள உபகரணங்கள், கணனிகள் மற்றும் தொடர்புடைய உதிரிப்பாகங்கள் என்பதால் அதில் ஒரு பகுதி அருவச் சொத்தாக இனங்காணக்கூடியவாறு உபகரணங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 2009, 2010, 2012 ஆகிய வருடங்களின் கணக்குகளுடன் தொடர்புடைய வருடாந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளதால், இவ்விடயத்தை 2014ஆம் ஆண்டின் அறிக்கைக்கு உட்படுத்துவது பொருத்தமா என்பதைப்பற்றி மீண்டும் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

***ச. நியம இல.39***

வர்த்தக கடனுக்கென அறவிடமுடியாக் கடன் அடிப்படையில் கூட்டுத்தாபன சபை நிருபம் ஒன்றினால் அனுமதிக்கப்பட்டு நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட்டதாகும். அடிப்படை இல்லாமல் முன்வைக்கப்படும் கூற்றுடன் உடன்பட முடியாது.

2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

அ. இவ்விடயம் அறிக்கையில் 2.2.2 “அ” ii மற்றும் “C” வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தெளிவுரை இதற்கும் பொருத்தமானதாகும்.

ஆ. கொள்கையளவில் ஒலிபரப்புக் கால வருமானக் கணக்கீட்டின்போது பிரசார அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்படும். பிரசார அட்டவணையைப் பரீட்சிப்பதன் மூலம் இதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

உதராரணமாகக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளை முன்வைக்கின்றேன்.

i. சரியானது.

ii. வருடத்தில் விநியோகிக்கப்படும் பட்டியல்கள் உரிய வருடத்திற்குரியதாக மாத்திரமன்றி,

தரப்பட்டுள்ள அவதானிப்புடன் உடன்பட முடியாது.

iii. “விற்பனை அற்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது” என்னும் விடயத்துடன் உடன்படி முடியாது. நிகழ்ச்சி ஒலிபரப்பப்படாததனால் இது கடனின் கீழ் குறிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் இது திருத்தப்படும்.

**2.2.4. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

அ. 2015ஆம் ஆண்டு வரை குறைந்துவரும் மீதியின் மீது கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வருடம் தொடக்கம் செலவினக் கொள்கையை எளிய முறைக்கு மாற்றியதனால் அப்போதிருந்த ஆதனங்களின் ஆயுட்காலத்தைக் கவனத்தில் கொண்டு மீண்டும் எளிய முறையின் பிரகாரம் சீராக்கம் செய்து கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கை மாற்றத்தினால் 100 வீதம் சரியாக கணிப்பீடு செய்வதற்கு எல்லா நிலையான சொத்துகளும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட விலை இனம்காணப்பட்டு குறைந்து வரும் முறையில் கணக்கீடு செய்யப்பட்டு எளியமுறையில் கணிப்பீடு செய்து பெறுமானத்தை இனம்காணவேண்டி உள்ளது. இருப்பினும் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிலையான சொத்துகள் அந்த முறையின் பிரகாரம் இனம்காண்பதற்குத் தேவையான தகவல்கள் இல்லாததால் இதனை 100 வீதம் சரியாக மேற்கொள்ள முடியாதென்பதை அறிவிப்பதுடன் தற்போதுள்ள சொத்துகளின் ஆயுட்காலத்தைக் கவனத்தில்கொண்டு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானங்கள் கணக்குகளுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன. சொத்துகளின் ஆயுட்காலத்தைக் கவனத்தில் கொண்டு அவ்வாறு தீர்மானிப்பதற்கு நியமங்களினால் இடமளிக்கப்பட்டுள்ளது. அவதானிப்புகளின் மூலம் கணிப்பீடு செய்து காட்டப்பட்டுள்ள பெறுமானத்துடன் உடன்பட முடியாது. இவ்விடயம் 2013ஆம் ஆண்டிலும் தெளிவுபடுத்தப்பட்டது.

ஆ. கணக்குளில் இணைக்கப்பட்டுள்ள 11 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் மீதிக்கு மதிக்கப்பெறாத காசோலைகள் அட்டவணைப் பெறுமானம் சேர்க்கப்பட்டதன் பின்னர் இதற்கு சமமானதாகும்.

இ. பந்தியுடன் இணங்குகின்றேன்.

ஈ. பிராந்திய அலுவலகங்களில் பேணப்படும் நடைமுறைக் கணக்குகளுக்கு தலைமை அலுவலகத்தினால் பிராந்திய அலுவலகம் சார்பில் அறவிடும்தொகை நடைமுறைக்கணக்கில் பதியப்படும். அந்தந்த மாத முடிவில் கிடைக்கப்பெற்ற தொகை தொடர்பான விபரம் உரிய பிராந்திய அலுவலகத்துக்கு அனுப்பப்படுவதுடன் இத்தொகைகளுக்குரியவாறு பிரசாரம் செய்யப்படும் விளம்பரங்களின் பெறுமானத்தை உட்படுத்தி மாதாந்த குறிப்பேடு ஒன்று அனுப்பப்படுவதுடன் அதன்மூலம் நடைமுறைக் கணக்கில் சீராக்கம் மேற்கொள்ளப்படும். அவ்வாறு குறிப்பேட்டின் சீராக்கத்தின் பின்னர் எஞ்சும் தொகை கடனின் கீழ் காட்டப்படும். இது பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் திருத்தப்பட வேண்டிய மீதி என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

உ. கணக்காய்வு விதப்புரையுடன் உடன்படுகின்றேன்.

ஊ. 2013ஆம் ஆண்டு அமைச்சினாலும் 2014ஆம் டிசம்பரில் திறைசேரியினாலும் வழங்கப்படும் வாகனங்கள் கணக்குகளுக்கு உட்படாமலிருப்பது அவற்றின் விலைகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையாகும். 2015 ஆம் ஆண்டில் திருத்திக்கொள்ளப்படும்.

எ. திருத்தப்பட்ட வாகனங்களின் செலவினங்கள் கணக்கில் குறிக்கப்படாத தொகையாக கணக்காய்வின்போது காட்டப்பட்டுள்ள தொகையில் 480012 ரூபா வற் வரித்தொகையாக இருப்பதுடன் 200,009 ரூபா தடுத்துவைக்கப்பட்ட தொகையில் செலுத்தப்பட்ட தொகையாகும். செலவினக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்ட தொகை மாத்திரமே உட்படுத்தப்படுதல் வேண்டும். வற் வரித்தொகை செலவினக் கணக்கிற்கு உரியதன்று. செலவினக் கணக்கில் குறிக்கப்பட வேண்டிய 200,009 ரூபாவை 2015 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏ. கணக்காய்வறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் 17874788 ரூபா செலுத்தப்பட்டதாகக்

காட்டப்பட்டிருப்பினும் கணக்கின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ள தொகை 17364788 ரூபா ஆகும். இத்தொகையில் 510000 ரூபா 2012, 2013 ஆம் வருடங்களுக்குரியவை என்பதை ஏற்றுக்கொள்வதுடன் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், முன்னைய வருடம் ஒன்றில் கைவிடப்பட்டிருந்த ஒரு தொகையை இந்த வருடத்தில் செலுத்துவதனால் உரிய வருடத்துக்கான சீராக்கம் தேவைப்படுவதில்லை. அவ்வாறாயினும், 2015 பெப்ரவரி மாத்தில் நடத்தப்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியின் பிரசார உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்ட தொகை 2014ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருப்பினும், இது 2015ஆம் ஆண்டில் உட்படுத்தப்பட்டிருப்பின், பொருத்தமானது என ஏற்றுக்கொள்கின்றேன்.

ஐ. செலவினங்களை அந்தந்த செலவுத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்து வருட இறுதியில் அலைவரிசைகளின் பிரகாரம் வகைப்படுத்தி, நிர்வாகச் செலவினம் மற்றும் நடவடிக்கைச் செலவினம் போன்றவற்றை வேறுபடுத்தி தயாரிக்கப்படுவதனால், ஒலிபரப்பு நிலையங்களினால் நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தும் செலவினமும் விற்பனைச் செலவினத்தின் கீழ் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

இரண்டு மாத கால செலவினம் வருடத்தின் செலவினங்களில் உட்படுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

ஒ. ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தப்பட்ட 8ஆம் இலக்கக் குறிப்பை இத்துடன் முன்வைக்கின்றேன் (இணைப்பு 2)

ஓ. ஏற்றுக்கொள்கின்றேன். 2015ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது.

ஔ. மீளாய்வாண்டில் குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்படவில்லை என்பதுடன் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட வாகனங்களில் WP PC 4398, 4283, 4284, 4281 ஆகிய வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் PB 8583 மற்றும் PB 8531 ஆகிய இரண்டு வாகனங்களும் விபத்துக்குள்ளானதால், ஓட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு வாகனத்துக்கு 2014இல் காப்புறுதி இழப்பீடு கிடைக்கப்பெற்று கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த வாகனத்துக்கு 2015ஆம் ஆண்டு காப்புறுதி இழப்பீடு கிடைக்கப்பெற்றுள்ளது. பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள வாகனங்களை பாவனைக்கு உதவாதது என கவனத்தில் கொள்ள முடியாது.

க. 2011ஆம் ஆண்டு வரை பொருளாதார சேவை வரி கணிப்பீடு செய்யும் நூற்றுவீதம் 1% ஆக இருந்ததுடன் 2011 ஏப்ரல் 01இன் பின்னர் 0.25 வீதம் ஆக கணிப்பீடு செய்வதனால் மிகையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் இத்தொகை தேசிய வருமான வரித் திணைக்களத்துக்கு அனுப்பப்படவில்லை என்பதுடன் 2015ஆம் ஆண்டில் இதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ங. இப்பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள 180, 988 ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்கள் நிர்வாகக் கணக்கில் கணக்கிடப்படவேண்டியவை ஆகும். எனவே, கணக்கீடு சரியானதாகும்.

277 918 ரூபாவுக்கு மதிப்பீடு செய்து "இலவசமாகப் பெற்ற பொருட்கள்" என காட்டப்பட்டுள்ள பொருட்கள் இலவசமாகக் கிடைத்த பொருட்கள் அல்ல. அவை நடவடிக்கைப் பிரிவுக்குக் வரவழைக்கப்பட்ட பொருட்கள் ஆகும் என்பதுடன் அவற்றின் சரியான பெறுமானம் 277,936.48 ரூபா ஆகும். இது சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

301,750 ரூபா பெறுமதி வாய்ந்த இசைக்கருவிகள் வழங்கும் முற்பணத்தின் 2014 டிசம்பர் மாதத்தில் பெறப்பட்டிருந்ததுடன் இது குறிப்பேட்டின் ஊடாக 2015 ஜனவரி மாதம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 2014 டிசம்பர் மாதமளவில் வழங்கல் முற்பணம் என காட்டுவது சரியானதாகும்.

தொகைக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் பௌதீக மீதிக்கிடையிலான வேறுபாடு அவ்வாறே காணப்படுகின்றது.

ச. கைவிடப்படப்பட்ட செலவினம் அல்லது வருமானம் அடுத்த வருடத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருப்பின் நியமங்களுக்கு ஏற்ப வருடத்தின் வருமானமாகக் கணக்கீடு செய்வது தவறன்று. பந்தியில் குறிக்கப்பட்ட விடயத்தை ஏற்றுக்கொள்கின்றேன்.

ஞ. 2013 டிசம்பர் 12ஆம் திகதி காணியை குத்தகைக்கு வழங்கி பெறப்பட்ட 420,000 ரூபா தொகையில் 2013ஆம் வருடத்தில் 20 நாட்களுக்கான தொகை 25,013 ரூபாவாக இருப்பதுடன் எஞ்சிய தொகை 2014ஆம் ஆண்டுக்கானது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

ட. கூட்டுத்தாபனத்தின் தீர்மானம் ஒன்றினால் ஊவா மாகாண சபையில் ஒலிபரப்பு நிறுத்தப்பட்டதனால், அது வரை கிடைக்கவேண்டியிருந்த தொகை கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பரிசீலனை செய்து பின்னர் பதில் வழங்கப்படும்.

ண. திருகோணமலை கருத்திட்டத்தின் கீழ் வருமானத்தில் செலவினத்தைக் கழித்து தேறிய தொகை காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். நிலையான ஆதனங்களுக்கான தேய்வு கூட்டுத்தாபனத்தின் செலவின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இதன் தேறிய விளைவு பூச்சியமாக இருப்பதனால் கூட்டுத்தாபனக் கணக்கின் கீழ் பாதிப்பு ஏதும் இல்லை. செலவினமாகக் காட்டப்பட்டிருந்த 6,783,584 ரூபா மற்றும் வருமானம் 23,394,866 ரூபாவை கணிப்பீடு செய்வதற்கான செலவினப் பட்டியல்கள் அடங்கலான அனைத்து விபரங்களும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

த. திருகோணமலை கருத்திட்டம் தொடர்பில் சுவீகரிப்புச் செலவின பெறுமானத்தின் படி சொத்துகள் கணக்கீடு செய்யப்பட்டிருப்பினும் கணனி உபகரணங்கள் பாவிக்கப்பட்டவை என்பதனால் அவற்றை மீள்கணிப்பீடு செய்து பெறுமானத்தை இனம்கண்டு கணக்கு வைப்பதற்காக மேற்கொண்ட தீர்மானத்தினால் இது குறைக்கப்படவில்லை. இது குறைக்கப்பட்டிருந்திருப்பின் மறுபக்கத்தினால் தேய்வுக்கணக்கின் கீழ் சீராக்கம் செய்யப்படுவதனால் இலாபத்துக்கு பாதிப்பு ஏதும் இல்லை.

ந. வெளிநாட்டு நிறுவனத்தின் நிதி 2012/2103 என குறிப்பிடப்பட்டிருப்பினும் அதனை கூட்டுத்தாபனம் 2012 ஆம் வருடமாகவும் 2013/2014ஆம் வருடத்தை 2013ஆம் வருடமாகவும் 2014/2015 ஆம் வருடத்தை 2014ஆம் வருடமாகவும் கருதியுள்ளது. எனவே, கணக்கீடு சரியானது. இதன்மூலம் கணக்குகளுக்கு விசேட பாதிப்பு ஏற்படுவதில்லை.

ப. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தெளிவில்லாததால் பரிசீலனை செய்து பதில் அனுப்பப்படும்.

ம. கடன் அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அதற்கான ஒதுக்கீட்டை மேற்கொள்ளத் தேவையில்லை

ய. கணக்காய்வு அவதானிப்பு சரியானது.

ர. கணக்காய்வு அவதானிப்பு சரியானது.

**கடந்த ஆண்டின் கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) கிடைக்க வேண்டிய குத்தகை தொகை கணக்குகளில் காட்டப்படவில்லை.

(ஆ) சீராக்கப்படவில்லை. காரணம், காணப்படுகின்ற சில கட்டடங்கள் புனரமைக்கப்படுவதாலும், கட்டடமொன்றில் புதிய பகுதியொன்று சேர்க்கப்படுவதாலும் மேற்படி செலவுகள் செய்யப்பட்டுள்ளன. இதை பரிசோதித்து 2015 ஆம் ஆண்டின் கீழ் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 ஆம் ஆண்டிலும் இந்த விடயத்துக்கு பதிலளிக்கப்பட்டுள்ள நிலையில் 2014 ஆம் ஆண்டிலும் மேற்படி விடயங்கள் மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை காண முடிகிறது. சீதுவ காணி

ஒலிபரப்பு திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டதொரு பழைய காணி என்பதோடு அப்போது அதற்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இராணுவத்துக்கு அளிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்டு பணம் பெறப்பட்டுள்ளதோடு அத் தொகை கட்டடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. கணக்கு வைக்கும் முறையில் தவறு ஏற்பட்டுள்ளது.
காலி ஹப்புகல காணியும் அரசினால் அளிக்கப்பட்டதொரு காணி என்பதோடு சுவீகரிக்கப்பட்ட தினத்துக்கு பெறுமதி கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. ஆகவே, கிடைத்த தொகை வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. காணிக்கு பெறுமானத் தேய்வு கழிக்கப்படாத காரணத்தினால் பெறுமானத் தேய்வு கணக்கு மற்றும் திரட்டிய கடன் தேய்மான கணக்குக்கு எவ்வித தாக்கமும் இல்லை.

(ஈ) இன்றளவில் ஏக்கல களஞ்சியத்தில் உள்ள உதிரிப்பாகங்களில் சில உதிரிப் பாகங்களை பாவனைக்கு எடுக்க முடியுமென்பதால் களஞ்சியத்தை மூடி விடும் நடவடிக்கைகளை ஆரம் பிக்கும் வரைக்கும் இச் சொத்துக்களை நடைமுறை ஆதன கணக்கின் கீழ் காட்டப்படுதல் வேண்டும்.

(உ) அவதானிப்புகள் சரியானவை

(ஊ) மேற்படி கொள்வனவுகளுக்கு ஏற்புடைய வவுச்சர்களை மீள பரிசோதித்து பதில் வழங்கப்படும். அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூ 25,687,683/- கணக்கிடப்பட விதம் மற்றும் வவுச்சர் விபரங்கள் கணக்காய்வு விசாரணையில் காட்டப்படாததாலும் பல ஆண்டுகள் பழைய கொடுக்கல் வாங்கல் என்பதாலும் மீள பரிசோதிக்க வேண்டும்.

**2.2.5.** இணங்காத நிர்வாகக் கணக்குகள்

(அ) ஒலிபரப்பு நேர கடன்கொடுத்தோர்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வித்தியாசம் சரியானது

(ஆ) ஒலிபரப்பு நேர கடன்பட்டோர்

மாற்றம் இல்லை. ஒலிபரப்பு நேர கடன்பட்டோர் நிதி அறிக்கைகளில் ஒரு பகுதி "வர்த்தக கடன்பட்டோர்" எனவும் இதர பகுதி செல்லாக் காசோலை கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. நிலுவையில் மாற்றம் இல்லை.

கிடைக்க வேண்டிய வருமானங்கள் (பல்வேறு)

கிடைக்க வேண்டிய வருமானங்கள் மற்றும் கோபுரங்கள் மூலமான வருமானங்கள் ரூ 6,240,717.22 மற்றும் கிடைக்க வேண்டிய நிலையான வைப்புகளுக்கான வட்டி ரூ 1,681,891.98 ஆகிய இரண்டையும் மேற்படி நிலுவை கொண்டுள்ளது. இது அட்டவணையுடன் பொருந்துவதோடு சரியான பெறுமதி ரூ 7,862,609/- ஆகும்.

அடையாளங் காணப்படாத நிலுவைகள்

(அ) முதல் (ஈ) வரை சுட்டிக்காட்டப்பட்டுள்ள அடையாளங் காணப்படாத நிலுவை ரூ 29,040,205/- தொகை 2002 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற நிலுவை என்பதோடு அதனை அடையாளங் காண்பதற்கு ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் இனங் காண முடியவில்லை.

**2.2.6.** தெளிவு படுத்தப்படாத மாற்றங்கள

களஞ்சிய மொத்த கணக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள நிலுவைகளுள் இதர உதிரிப் பாக

நிலுவை தவிர இதர நிலுவைகள் சரியானவை. ஆனால் உதிரிப் பாகங்களின் கீழ் ஆய்வு சபை அறிக்கைகளின் பிரகாரம் மொத்த நிலுவை ரூ 120,985/- ஆக இருத்தல் வேண்டும். அதன் படி வித்தியாசம் ரூ 724,415 ஆக இருத்தல் வேண்டும்.

**2.2.7.** நிச்சயமற்ற கணக்கு சரியானது

**2.2.8** கணக்காய்வு நடவடிக்கைக்கு சாட்சியின்மை

(அ) நிலையான ஆதனங்கள் தொடர்பாக பொது 287 இன் பிரகாரம் தேவையான விபரங்களை உள்ளடக்கி காணிகள் மற்றும் கட்டடத்துக்கு ஏற்புடையதான விபரமான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆதன பேரேடும் தயாரிக்கப்பட உள்ளது. பொது 287 இன் கீழ் காணி கட்டட ஆவணத்தை தொடர்ந்தும் சீராக்குவதற்கு 2015.06.28 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட காணிகள் பற்றிய விபர ஆவணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 03)

(ஆ) நிதிக் கூற்றின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள செலவான ரூ 73,414,986/- தொகை சரியானது. போக்குவரத்து பிரிவிடமிருந்து பெறப்பட்ட செலவுடன் ஒப்பிடுவதற்கு காரணம் தெளிவில்லை.

(இ) இனங் காணப்பட முடியாத நிலுவை என்பதால் விபரமான அட்டவணையொன்றை வழங்க முடியாது.

(ஈ) மேற்படி அட்டவணை தயாரிக்கப்பட்டு பின்னர் சமர்ப்பிக்கப்படும்.

(உ) மரண அறிவித்தலுக்கு காட்டப்படும் நிலுவை சரியானது. பரிசோதிக்கப்பட்டு சரி செய்ய வேண்டியதொரு நிலுவை ஆகும்.

(ஊ) செலுத்தப்பட வேண்டிய வைப்புகளுக்கு காட்டப்படும் நிலுவை இனங் காண முடியாத நிலுவை என்பதால் அட்டவணையொன்றை சமர்ப்பிக்க முடியாது.

(எ,ஏ,ஐ)
திருகோணமலை மீள் ஒலிபரப்புக்கூடத்தின் சொத்துக்கள் தொடர்பாக காணப்படுகின்ற விபரக் குறிப்பை பொறுப்பேற்ற பின்னர் ஒவ்வொரு வகைகளையும் பரிசோதித்து அந்தந்த அறைகளுக்கமைய விபரக் குறிப்பு ஆவணங்கள் எழுதப்படுகின்றன. அவ்வாறு எழுதப்பட்டதை தொடர்ந்து பொருள் கணக்கெடுப்புகளை மேற்கொண்டு 2015 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

(ஒ) புதிய கட்டட நிர்மாணத்துக்கு செலுத்தப்பட்டுள்ள முற்பணத் தொகை இதன் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு இதன் சகல செலவுகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செலவு மதிப்பீடுகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகளை கூட்டுத்தாபனத்துக்கு சமர்ப்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

(ஓ) ஊழியர் முற்பணம்
இனங்காணப்பட முடியாத நிலுவை என்பதால் அட்டவணைகளை சமர்ப்பிக்க முடியாது.

(ஔ) ஜர்னல் குறிப்புகளுடன் தேவையான ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் தேவையான ஆவணங்கள் என்ன என்பதை தெரிவித்தால் அவற்றையும் சமர்ப்பிக்க முடியும்.

(க) ஜர்னல் குறிப்புகளுடன் தேவையான ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் தேவையான ஆவணங்கள் என்ன என்பதை தெரிவித்தால் அவற்றையும் சமர்ப்பிக்க முடியும்.

(கா) கடன்பட்டோர் நிலுவைகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(கி) வெளிநாட்டு ஒலிபரப்பு நேர விற்பனைக்கு விலைப்பட்டியலாக கணக்கு கூற்றே

பயன்படுத்தப்படுகிறது. கணக்கு கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொணடு பணம் அறவிடப்படும்.

(கீ) லக்ஹண்ட வானொலிச் சேவை 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வளாகத்தில் இயங்கியதோடு 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த வளாகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டது. அது வரை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் மேற்படி சேவைக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்கு 2000 ஆம் ஆண்டில் 118 ஆம் இலக்க ஜர்னல் மூலம் கிடைக்க வேண்டிய நிதியாக கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு நிதிப் பணிப்பாளரின் A 220 ஆம் இலக்க கோப்பில் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தொகையை செலுத்துமாறு 2000 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தவிசாளரிடம் கோரியுள்ள போதிலும் இதுவரை அத்தொகை செலுத்தப்படவில்லை.

(கு) சமர்ப்பிக்கபடாத வவுச்சர்களில் 12 வவுச்சர் பத்திரங்கள் சம்பள செலுத்துகைகளுக்கு ஏற்புடையவை என்பதோடு அதன் பெறுமதி ரூ 289,892,775/- ஆகும். சம்பள ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமரப்பிக்கப்படவில்லை. எஞ்சிய வவுச்சர் பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சம்பள ஆவணங்களுக்கு பிரத்தியேக வவுச்சர்கள் தயாரிக்கப்படாத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் இதற்காக வவுச்சர்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(கூ) ஒலிபரப்பு நேர கடன் கொடுத்தோர் அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(கெ) ஒலிபரப்பு நேர கடன்பட்டோர் அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.3** கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) ஒலிபரப்பு நேர கடன்பட்டோர் அட்டவணையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(இ) கிடைக்க வேண்டிய தொகை ஒலிபரப்புக் கூட்டத்தாபனத்துக்கு தண்ணீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி போன்ற பல்வேறு சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வைப்பிலிடப்பட்டுள்ளது. அச் சேவைகளை பெற்றுக் கொள்ளும் வரை வைப்புத் தொகையை மீள பெற முடியாது. இந்த வைப்புகள் தொடர்பாக கூட்டத்தாபன சபை பத்திரமொன்றை சமர்ப்பித்து தீர்மானமொன்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) அவதானிப்புகள் சீரானவை

(உ) அவதானிப்புகள் சரியானவை

**2.4** சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி ஒழுகாமை

அ கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

ஆ (i) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(ii) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(iii) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(iv) பரிசோதித்து பார்த்து விட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

(v) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(vi) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(vii) இன்றளவில் இத்தொகை தீர்க்கப்பட்டு விட்டது.

(viii) பயணங்கள் தொடர்பான மாதாந்த சுருக்கங்கள் உரிய தினத்துக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டது.

(ix) சகல வாகனங்களுக்குமான லொக் புத்தகங்கள் இன்றளவில் எழுத்தப்பட்டு வருகின்றன.

(x) கட்டட புனரமைப்பின் போது போதுமான அளவு இட வசதிகள் இல்லாத

காரணத்தினால் முறையானதொரு செயன்முறையின் அடிப்படையில் இவற்றை களஞ்சியப்படுத்துவதற்கு சிரமம் ஏற்பட்டது. இருந்தாலும் எதிர்காலத்தில் இந்த நிலைமையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(xi) மாதாந்தம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாலும் கூட்டுத்தாபன தேவைக்கேற்ப நிதி கூற்று மற்றும் செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.5.** போதுமானளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்
இதன் கீழ் அவதானிப்புகள் குறிப்பிடப்படவில்லை

**3.** நிதி மீளாய்வு

**3.1.** நிதிப் பெறுபேறுகள்
நிதிப் பெறுபேறுகள் தொடர்பாக கணக்காய்வின் அவதானிப்புகள் சரியானவை

**3.2.** ஆய்வு சார் நிதி மீளாய்வு
கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

**3.3.** நிறுவனத்துக்கு எதிராகவோ அல்லது நிறுவனத்தினாலோ ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் செயற்பாடுகள்
கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

**3.4.** செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்
கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

**4.0.** தொழிற்பாட்டு மீளாய்வு

**4.1.** செயலாற்றுகை

(அ) சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஏற்புடைய அறிக்கைகள் கூட்டுத்தாபனச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**4.2.** முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) பிரதிவாதியிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை

(இ) கொள்வனவு வழிகாட்டல் கோவைக்கு முரணாக செயற்பட மாட்டாது என்பதோடு அவசர நேரங்களில் மின்னஞ்சல் மூலம் பொருள் கொள்வனவு மேற்கொள்ளப்படும். அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை ஏற்புடைய விவரக்குறிப்புகளுடன் பொருந்துகின்றதா என்பதை ஆராய்ந்த பின்னரே மேற்கொள்ளப்படும்.

(ஈ) உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக நிலவும் குறைப்பாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) இரண்டு வீடுகளின் உரிமையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகுறது.

(ஊ) கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான, இராணுவத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அப்போதைய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் கையளிக்கப்பட்டுள்ளதோடு வெளி ஆட்கள் அனுபவிக்கின்ற வீடுகளை மீள பெற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயன்படுத்தப்படாத வீடுகளையும் புனரமைப்பு செய்து பாவனைக்கு எடுக்க முடியுமா என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

**4.3.** தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை.

(ஆ) தேசிய பாதுகாப்பு தேவைகளுக்கமைய பொலிஸ் திணைக்களத்துக்கு இக்கோபுரம் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளது.

**4.4.** குறைப்பயன்பாட்டு ஆதனங்கள்

கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பழுதடைந்து காணப்படுகின்ற வீடுகளை புனரமைத்து கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டுக்கு எடுப்பதற்குள்ள இயலுமை தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

**4.5.** பொருளாதார சாராத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பொருளாதார சாராத கொடுக்கல் வாங்கலாக குறிப்பிடுவதற்கு இணங்கமாட்டேன். சட்ட ரீதியான நிலைமைகளின் பேரில் தொழில் திணைக்களத்தின் உத்தரவின் பிரகாரம் மிகை கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடி காரணமாக பொருளாதார சேவைகள் கட்டணங்கள் உரிய முறையில் அனுப்பீடு செய்யப்படாத காரணத்தினால் அபராதத் தொகை அறவிடப்பட வேண்டுமென உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

**4.6.** இனங் காணப்படாத குறைப்பாடுகள

(அ) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை.

(ஆ) காணி தொடர்பான உரித்தை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் போது மதிப்பீட்டு பெறுமதிக்கு இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

(இ) மேற்படி கணக்கீட்டுக் கட்டமைப்பு கொள்வனவு தகுதிகள் பரிசீலிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் நிறுவனம் வங்குரோத்து அடைந்ததன் பேரில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

(ஈ) தற்போதைய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

**4.7.** ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

ஒப்பந்த நிர்வாகத்தின் குறைப்பாடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள மேற்படி விடயங்களுடன் இணங்க முடியாது.

**4.8.** உரிய முறையில் சுவீகரிக்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படல்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணி 30 ஆண்டுகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் குத்தகை காலத்தை நீட்டிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**4.9.** இதர அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

(அ) ஏக்கல ஒலிபரப்புக் கூடம் அமைந்திருந்த காணியில் ஒரு பகுதி தரைப்படையினால் அங்கவீன இராணுவ வீரர்களுக்கு பண்ணையொன்று அமைப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டதோடு அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டதொரு நடவடிக்கை என்பதால் அதில் தலையிடுவதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் முடியாது.

(ஆ) செலசினே நிறுவனம் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் இயங்கிய நிறுவனம் என்பதால் உடன்படிக்கையின்றி கூட்டுத்தாபன வளாகத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. இதற்கென அறவிடப்பட வேண்டிய தொகையை கணக்கிட்டு கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**4.10.** பணியாற்றொகுதி நிர்வாகம்

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளை இயற்றுவதற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) சேவை தேவைப்பாடுகளின் அடிப்படையில் மேற்படி ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) மேற்படி கடமை நடவடிக்கை மாற்றமானது, மேற்படி பிரிவுகளில் காணப்பட்ட கடமைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது.

(ஈ) பணியாற்றொகுதி மிகை நிலை காணப்பட்ட போதிலும் மேற்படி கடமைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு போதுமான அளவு பணியாற்றொகுதியினர் காணப்படாத காரணத்தினால் இச்சேவையை பெற நேரிட்டது

(உ) மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) சேவை தேவைப்பாடுகள் கருதி கூட்டுத்தானச் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மேற்படி சேவை நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(எ) எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**5.0.** கணக்கீட்டு நடவடிக்கைமுறையும் நல்லாட்சியும்

**5.1.** நிதிக் கூற்றுகள் சமர்ப்பிக்கப்படல் சரியானது.

**5.2.** இணைந்த திட்டம்

(அ) 2016 ஆண்டு இணைந்த திட்டத்தை தயாரிக்கையில் இதனை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**5.3.** செயற்பாட்டுத் திட்டம்

(அ) 2016 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிக்குமாறு அரசாங்க நிதி சுற்றுநிருபம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

(ஆ) இணைந்த திட்டம் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) தொழிற்பாட்டுத் திட்டம் மற்றும் இணைந்த திட்டம் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**5.4.** உள்ளக கணக்காய்வு

(அ) அந்தந்த ஆண்டுகளில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள கணக்கு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்படாத போதிலும், சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை.

**5.5.** கணக்காய்வுக் குழுக்கள்

கணக்காய்வுக் குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை.

**5.6.** வருடாந்த அறிக்கைகள் சபை ஆவணப்படுத்தல்

2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அச்சில் உள்ளது

**5.7.** தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

(அ) கைவினைக் கைத்தொழில் சபை சார்பாக வெளி ஆளொருவர் தோற்றி மோசடி செய்துள்ளாரெனில் அது தொடர்பாக கைவினைக் கைத்தொழில் சபையே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) அன்டெனா கோபுரம் கொள்வனவுக்கு செலவிடப்பட்ட ரூ 23,119,683/- தொகை கணக்கிடப்பட்ட விதம் தெளிவில்லை. அது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கை கணக்கில் காட்டப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.ஆனால் பொறியியல் பிரிவின் அறிக்கையொன்றுக்கமைய 2010 ஆம் ஆண்டில் மூலதனக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனை மீள ஆராயந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

**5.8.** சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை ஆற்றுதல்

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு செவிமெடுத்தல் நிலைமை தொடர்பாக பணிப்பாளரின் (ஒலிபரப்பு) கீழ் அது தொடர்பாக பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஆற்றுப்படுத்துவதே பொதுவான செயன்முறையாக உள்ளது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய செவிமெடுக்கும் நிலைமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு உள்ள இயலுமையை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**6.** கட்டமைப்புகள் மற்றும் நிர்வாகம்

கட்டமைப்புகள் மற்றும் நிர்வாகத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

சட்டத்தரணி நந்த முருத்தெட்டுவேகம
தலைவர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

பிரதிகள் : செயலாளர், வெகுசன ஊடகம்
செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு